விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 06 புதன்கிழமை (20.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152




# தமிழ் மக்கள் சிறுபான்மையினர் அல்ல; விரைவில் அரசியல் தீர்வு வழங்கப்படும்

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி

(கொழும்பு)

'தமிழர்கள் உட்பட இலங்கையில் எந்த ஒரு இனத்தினரும் சிறுபான்மையினர் அல்ல' 'தமிழர்கள் ஒருபோதும் ஆயுத விரும்பிகளாக இருந்ததில்லை. விரைவில் அவர்களுடைய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு முன்வைக்கப்படும்' இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும் என அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். யாழ். மாவட்ட செயலகத்தில் மே மாத 5-வது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 7 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ந)







## பிரபாகரனின் சடலம் மீட்பு; இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தொலைக்காட்சிகள் மூலம் அறிவித்துள்ளனர்.

சீருடையணிந்த நிலையில் பிரபாகரனின் சடலம் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் காண்பிக்கப்பட்டன.

தலையின் பின் பகுதி சிதைவடைந்த நிலையில் துணியொன்றால் மூடப்பட்ட நிலையில் நந்திக்கடல் பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிரபாகரனின் சடலம் மீட்கப்பட்டது என்ற (12ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் உறுதிபடச் சொல்கிறார் பத்மநாதன்

## சர்வதேச சமூகம் துரோகம் இழைத்ததாகவும் குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதாக அந்த இயக்கத்தின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதன் அறிவித்துள்ளார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமது இயக்கத்தின் பல மூத்த உறுப்பினர்கள் வஞ்சகத்தனமாக கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் போரில் வெற்றி பெற்றிருப்பதாகப் பிரகடனப்படுத்தலாம். ஆனால் இது ஒரு வஞ்சகத்தனமான வெற்றி என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை. (11 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்கள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

### ஐ.நா.மனிதநேய செயலர்

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், இடம்பெயர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான (11ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை இலங்கை முன்னெடுக்க வேண்டும்

### அமெரிக்கா,நோர்வே கோரிக்கை

இலங்கையில் உள்ள அனைத்து குடி மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் (12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பொது விடுமுறை

(கொழும்பு)

இன்று பொது விடுமுறை தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

வடக்கில் படையினர் ஈட்டிய வெற்றியை முன்னிட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக்குச் சென்ற அமைச்சர் முரளிதரன் பிரபாகரனின் சடலத்தை அடையாளம் காட்டினார்

## நேற்றுக் கொல்லப்பட்டதாகவும் முரண்பட்ட தகவல்

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று முன்தினம் கொல்லப்படவில்லை. நேற்று அதிகாலையே கொல்லப்பட்டார் என தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு பிரதேசத்துக்கு சென்று தான் பிரபாகரனின் சடலத்தை அடையாளம் காட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பி.பி.சிக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது, தொலைக்காட்சியில் அவரது உடல் (12ஆம் பக்கம் பார்க்க)

"கெட்டிமேளம் திருமண சேவை"



உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் செய்துகொள்ள

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E-MAIL: moorthydigital@gmail.com

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனரீதியான மோதலைத் தடுக்க பொலிஸார் உஷார் நிலையில்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்த பயங்கரவாதச் செயற்பாடுகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இனரீதியான மோதல்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேவையற்ற அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கியிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரட்ண கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமை யானது ஒரு பகுதி மக்களுக்கு மாத்திரம் கிடைத்த வெற்றி அல்ல, அனைவருக்கும் கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மற்றொரு நபரை துன்புறுத்துவது ஏற்றுக் கொள்ளப்படாது எனத் தெரிவித்தார்.

இனரீதியான மோதல்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சிலவேளைகளில் சிலர் தமது தேசப்பற்று உணர்வை அதிகமாக வெளிக்காட்ட முயலும் போது சில சம்பவங்கள் ஏற்படலாம்.

சிலர் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நகைக்கடைகள் போன்றவற்றை உடைத்து பெறுமதி வாய்ந்த பொருட்களைக் களவாட முயற்சிக்கலாம். கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடந்துள்ளன.

சிங்களவரோ, தமிழர்களோ, அல்லது முஸ்லிமோ எவராவது சட்டத்தை மீறி இனரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட வெற்றியை பலர் வீதிகளில் இறங்கி பட்டாசுகள் கொளுத்திக் கொண்டாடி வருகின்றனர்.

எனினும் இந்தக் கொண்டாட்டங்கள் சட்டத்தை மீறும் வகையிலோ அல்லது மற்றையவரை பாதிக்கும் வகையிலோ அமையக் கூடாது எனப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும் தமிழர்கள் பலர் வெட்டப்படுவதாகவும் வெளிநாடுகளில் செய்திகள் பரப்பப்பட்டிருந்தன.

இதனால் அச்சமடைந்த புலம் பெயர்ந்து வாழ் தமிழர்கள் இலங்கையிலுள்ள தமது உறவினர்களை தொடர்பு கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# 2இலட்சத்து 65ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் - ஐ.நா

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடந்த மோதல்கள் காரணமாக இதுவரை 2 இலட்சத்து 65 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் சரியான நிவாரணங்கள் மற்றும் சரியான கட்டுமானங்களின்றிப் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டிருப்பதாக யூ.என்.எச்.சி.ஆர் பேச்சாளர் ரொன் ரெட்மொண்ட் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சிறியதொரு பகுதியும் மீட்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பெரும் எண்ணிக்கையானவர்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் முகாம்களில் இடப்பற்றாக்குறை காணப்படுவதுடன் மக்கள் மத்தியில் நெருக்கடி நிலையொன்று காணப்படுகிறது.

மோதல்கள் நடைபெற்ற பகுதிகளுக்கு மாத்திரமின்றி இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு செல்லக் கூட கடந்த சில நாட்களாக அனுமதிக்கப்படவில்லையென யூ.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு வலயப்பகுதிக்கு கடந்த 9ஆம் திகதியிலிருந்து செல்ல முடியவில்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இதனால் அந்த பகுதியிலிருந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்க முடியாமல் போனதாகவும் செஞ்சிலுவைச் சங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் அறிவித்திருந்தன.

இடம் பெயர்ந்த மக்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் பட்டினியுடன் பலவீனமடைந்து வருகின்றனர் என்றார் ரெட்மொண்ட். (ந-5)

# இடம் பெயர்ந்தோருக்காக ஜப்பான் 50 மில்.ரூபா உதவி

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு உதவும் வகையில் ஜப்பான் அரசாங்கம் 50 மில்லியன் ரூபாயை நிதியுதவியாக வழங்கியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

ஜப்பான் அரசாங்கப் பிரதிநிதி குனியோ தகாஷி நிதியுதவித் தொகையை ஜனாதிபதியின் விசேட ஆலோசகரான பஸில் ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

வழங்கப்பட்ட உதவிப் பொருட்களில் 560 கூடாரங்கள், ஆயிரம் பாய்கள் 4000 பிளாஸ்ரிக் விரிப்புகள் 30 ஆயிரம் ஜெரி கொள்கலன்கள், ஆயிரம் நுளம்பு வலைகள் அடங்குகின்றன.

இதேவேளை ஜப்பான் உணவுப் பொருட்களையும் உதவியாக வழங்கவுள்ளது.

அதன்படி 6255 மெட்ரிக் தொன் அரிசி, 132 மெட்ரிக் தொன் ரின் மீன் ஆகியன விரைவில் கொழும்பு வந்து சேரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# கிளி., முல்லை மாணவர்களின் க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் க.பொ.த (சா/த) பரீட்சை 2008 பெறுபேறுகள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

உரிய மாணவர்கள் யாழ். வலய கல்வி அலுவலக திட்டமிடல் பிரிவுடன் தொடர்பு கொண்டு தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ந)

# மரண அறிவித்தல்கள்

## அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன்



அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன் அவர்கள் 18.05.2009 கிளிநொச்சியில் காலமானார். அன்னார் காலம் சென்ற மனுவல் மரியாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மகனும், அருட்சகோதரி மரினா (திருச்சிலுவைக் கன்னியர்), சூரியஜீவன் (USA), நித்திலா (கியூடெக்-கரித்தாஸ் யாழ்ப்பாணம்), சக்திஜீவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை), ஆகியோரின் சகோதரரும் லூயிஸ் (USA), யமுனா (கச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் சிந்துஜன் (சம்பத்திரிசியார் கல்லூரி), தேனுஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மெரிஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

5, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6760

தகவல்:
தாய், சகோதரர்கள்

(2756)

## வில்பிறேட் மேரிலூட்ஸ் (யஸ்மின்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வில்பிறேட் மேரிலூட்ஸ் (யஸ்மின்) அவர்கள் 18.05.2009 அன்று காலமானார்.

அன்னார் பத்தினாதர் அருளம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும் வில்பிறேட் (நிமால்) இன் மனைவியும் கலிஸ்ரன், இமல்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

15, சுபாஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சு.பத்தினாதர் (தந்தை)

(2757)

# பிரபாகரன் உயிரிழக்கவில்லை என்று கூறுவோருக்கும் அதேகதிதான்

## அமைச்சர் யாப்பா ஆவேசம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழக்க வில்லையென இன்னும் சிலர் வெளிநாடுகளில் இருந்தவாறு கூறிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதாவது இதற்கு பின்பும் புலிகளுக்கு ஆதரவாக பேசுபவர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும். இதனை மறந்து விடக்கூடாது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளருடன் இணைந்து முப்படைகளை சிறப்பாக வழிநடத்தி முப்பது வருடங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கிய பயங்கரவாதத்தை இரண்டு வருடங்கள் இரண்டு மாதங்களில் முற்றாக ஒழித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதம் தொடர்பில் உலகத்தில் புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்கியவர்கள்.

முதன்முதலாக மனித வெடிகுண்டு என்ற அழிவு முன்மாதிரியை வெளிக்காட்டியவர்கள்.

அரசியல் தலைவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் முக்கியமாக சிவிலியன்களை புலிகள் கொலை செய்தனர்.

மாற்றுக் கருத்துக்கு இடமளிக்கவில்லை. தமிழ் மக்களுக்கே துரோகம் இழைத்தனர்.

இலங்கையின் பொருளாதார மையங்களை அழித்தனர். புலிகளின் அழித்தல் தொடர்பான விடயங்களை கேள்வியுற்றவாறே எனது இளமைக்காலம் கழிந்தது.

எப்போதும் நிம்மதியற்ற வகையிலேயே காலத்தை கழித்தோம். ஆனால் தற்போது எதிர்கால சந்ததியினருக்கு நாம் அதனை விட்டு வைக்கவில்லை.

இன்னும் சிலர் புலிகளுக்கு வக்காளத்து வாங்குவதாகவே தெரிகிறது.

பிரபாகரன் இன்னும் உயிரிழக்கவில்லையென சர்வதேச மட்டத்தில் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பின்னரும் புலிகளுக்கு ஆதரவாக யாராவது செயற்படின் அவர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும் என்றார். (ந-5)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனப் பணியாளர்களான
**செல்வி நித்திலா மரியாம்பிள்ளை,**
**அருட்செல்வி மரீனா மரியாம்பிள்ளை**
*(திருச்சிலுவை கன்னியர் நடமாடும் வைத்திய சேவை)*
அவர்களின் அன்பு சகோதரன்

**அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயூஸ் சரத்ஜீவன்**

அடிகளாரது மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அருட்தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் தாய், சகோதரர்கள் மற்றும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அருட்தந்தையின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், பணியாளர்கள்
கியூடெக்-கரித்தாஸ்
யாழ்ப்பாணம்.

(C-2484)

# மந்திகையில் இன்று கோப்சிற்றி திறப்பு

(வடமராட்சி)

புலோலி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் இன்று மந்திகையில் கோப்சிற்றியொன்றை திறந்து வைக்கவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை அல்வாயிலும் கற்கோவளத்திலும் கோப்சிற்றிகளைத் திறக்கவுள்ளது. (ந-10)

# இன்று ஒரு தகவல்

## நீதியில் தாமதம்

ஒரு வழக்கில் தாமதமாகத் தீர்ப்பு வழங்குவது நீதியையே மறுப்பதற்கு சமம்! என்று சொல்லியிருக்கிறார் ஒரு பெரியவர். இது நன்கு சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து.

இஸ்ரேலில் இபிரைப் கிஷான் என்ற ஒருவர் இருந்தார். பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்; நாடகம் எழுதியிருக்கிறார் ; பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார் ; வேடிக்கையாக எழுதக்கூடியவர்.

அவர் தனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை வேடிக்கையாக சொல்லியிருக்கிறார். பத்து வருடங்களுக்கு முன்னர் அவரிடம் ஒருவர் 20 பவுண்ட் கடன் வாங்கினாராம்.

வாங்கியவர், "இன்னும் இரண்டு மணி நேரத்தில் திருப்பித் தருகிறேன்" என்று சொல்லி வாங்கியிருக்கிறார். இல்லையென்றால், ஒரு நாளுக்குள் இந்த பணம் மறுபடியும் உங்கள் கையில் இருக்கும் என்று உறுதியாக சொல்லியிருக்கிறார். சொன்னதோடு சரி அவர் கொடுக்கவில்லை.

இவர் போன் பண்ணி பார்த்திருக்கிறார். அவர் ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள். கொடுத்து விடுகிறேன்" என்றார்.

ஒரு வாரம் கழித்து, இவர் போய் கேட்டிருக்கிறார்.

"வரும் திங்கட்கிழமை மத்தியானம் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

திங்கட்கிழமையும் கடந்து விட்டது. இவர் உடனே ஒரு சட்ட ஆலோசகரைப் போய்ப் பார்த்திருக்கிறார். அவர் இதைக் கேட்டு விட்டு "இன்னும் 72 மணி நேரத்துக்குள் பணத்தைக் கொடுக்கவில்லையானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஒரு நோட்டீஸ் விட்டிருக்கிறார்.

இரண்டு மாதம் வரை எந்த பதிலும் இல்லை.

இவர் இன்னொரு சட்ட ஆலோசகரிடம் போனார். அவர் உடனே நீதிமன்றில் ஒரு வழக்கை தொடுத்தார்.

5 மாதத்திற்குப் பின் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஆனால் கடன் வாங்கியவர் நீதிமன்றுக்கு வரவில்லை. உடம்பு சரியில்லையாம்.

ஒரு வருடத்துக்கு வழக்கை ஒத்தி வைத்தார்கள். அதன் பின்னரும் விசாரணை நடைபெறவில்லை. ஏனெனில், இதற்கிடையில் கடன் வாங்கியவர் வெளிநாட்டுக்குப் போய் விட்டார். கடன் கொடுத்தவர் ஒன்றரை வருடம் காத்துக் கொண்டிருந்தார். அவர் திரும்பி வரவில்லை.

மறுபடியும் வழக்கு ஆரம்பம்.

எதிரி ஊரில் இல்லை. வெளிநாட்டில் இருக்கிறார். வழக்கை நடத்த முடியாது என்று நீதிபதி சொல்லிவிட்டார்.

இவர் விடவில்லை. பெரிய கோர்ட்டுக்குப் போனார். அதில் ஒரு சிக்கல். அந்தக் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமானால் கடன்தொகை 50 பவுண்டுக்கு மேல் இருக்க வேண்டுமாம்.

ஆனால் இவர் கொடுத்திருப்பதோ 20 பவுண்ட் இவர் யோசித்தார். இன்னொரு 30 பவுண்ட் பணத்தை ஏற்கனவே கடன் வாங்கியவருக்கு அதிகார பூர்வமான அதிகாரி மூலம் அனுப்பி வைத்தார்.

பெரிய கோர்ட் கேசை எடுத்துக் கொண்டு கீழ்க் கோர்ட்டுக்கு ஒரு உத்தரவிட்டது. "எதிரி இல்லாமலே கேஸை நடத்தலாம்" என்று ஆனால் இந்த சமயத்தில் வெளிநாடு போயிருந்த கடனாளி உள்ளூருக்குத் திரும்பி வந்து விட்டார்.

கீழ்க் கோர்ட்டுக்கு குழப்பம். எதிரி உள்ளூரில் இருக்கிறார். ஆனால் எதிரி இல்லாமல் கேஸை நடத்தலாம் என்று உத்தரவு வருகிறது. ஒன்றும் புரியவில்லை. விளக்கம் தேவை என்று மறுபடியும் ஒத்தி வைப்புகள்.

இஸ்ரேலில் பெரிய சட்டத்தரணி ஒருவர் இருந்தார். கடைசியாக அவரிடம் போய் இவர் விபரத்தைச் சொன்னார். அவர் பொறுமையாகக் கேட்டார். கடைசியாக ஒரு ஆலோசனை சொன்னார். "இதோ பார். உன்னிடம் கடன் வாங்கினானே, அவனிடம் நேராகப் போய் பலமாக ஒரு அடி கொடு" என்றார்.

இவர் நேராக அந்த ஆளிடம் போனார். ஓங்கி ஒரு அடி கொடுத்தார். அடுத்த நிமிடம் அந்த ஆள் 50 பவுண்ட் பணத்தை திருப்பிக் கொடுத்தார். இவர் வாங்கிக் கொண்டு வந்து விட்டார்.

நியாயம் கிடைப்பது மட்டும் முக்கியமல்ல. நியாயம் நேரத்துக்குக் கிடைப்பதும் முக்கியம். அரை அடி நிலத்தை அடுத்தவன் ஆக்கிரமித்திருப்பான். அதை மீட்டுக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு இவன் கோர்ட்டுக்குப் போவான் முடிவு என்ன தெரியுமா?

அவனுக்கிருந்த அரை அடி நிலத்தையும் விற்றுவிட்டு தெருவில் அலைந்து கொண்டிருப்பான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கோட்டமட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வலயமட்ட சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தால் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டங்களிடையே சித்திர பாடத்தில் பல்வேறு அலகுகளில் நடாத்தப்பட்ட போட்டி முடிபுகள் வெளியாகியுள்ளன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான வலய மட்டச் சித்திரப் போட்டி எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற உள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இப்போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் போட்டிக்கு வரும் போது 18''x14'' அளவு வெள்ளை பிறிஸ்டல்போட் மட்டையையும் வரைதலுக்குரிய உபகரணங்களையும் கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்கின்றார்.

இப் போட்டிகளின் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் கோட்ட ரீதியாகத் தரப்படுகின்றது.

**யாழ்ப்பாணக் கோட்டம்**

**பிரிவு I**

**கருத்துவெளிப்பாட்டுச்சித்திரம்**

வ. மகிசாளினி – சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யோ. துசிகரன் , செ. திலக்ஷன் – யாழ். மத்திய கல்லூரி.

**ஆக்க அலங்காரச் சித்திரம்**

கி. மேரி கொளஸ்ரினா – கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், கு. நிஜானி – வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, த. தேவப்பிரியான் – சென்யோன்ஸ் கல்லூரி.

**அச்சுப் பதித்தல் சித்திரம்**

ஞா. நிரோகேசன் - வைத்தீஸ்வராக் கல்லூரி, ரி. யவாகரி – சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, எ. அஜித் – புனித பத்திரிசியார் கல்லூரி.

**பிரிவு II**

**கற்பனைச் சித்திரம்**

வே. சதீஸ்குமார் – வைத்தீஸ்வராக் கல்லூரி, கு. சத்தியதாசன் – சன்மார்க்க மகா வித்தியாலயம், க. கோபிகா – திருக்குடும்ப கன்னியர் மடம்.

**காட்டுருவாக்கச் சித்திரம்**

யோ. ராகுலன் - யாழ். மத்திய கல்லூரி, கோ. நிரோசன் – வைத்தீஸ்வராக் கல்லூரி, ர. பிரியா - சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரி.

**பிரிவு I**

**கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்**

ச. சஞ்சீவன் – கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆர். ஜதுசன், ஆர். விசோபன் - யாழ். இந்துக் கல்லூரி.

**ஆக்க அலங்காரச் சித்திரம்**

ப. கார்த்திகா - முத்துத்தம்பி மகா வித்தியாலயம், ம. கீர்த்தனா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, ச. நோறுகாந்தன் - நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயம்.

**அச்சுப் பதித்தல் சித்திரம்**

செ. கலாட்சன் – யாழ். இந்துக் கல்லூரி, கு. அபர்ணா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, வி. ஜர்சிகன்– யாழ். இந்துக் கல்லூரி.

**பிரிவு II**

**கற்பனைச் சித்திரம்**

ஜெ. மைதிலி - கனகரத்தினம் மகா வித்தியாலயம், இ. வித்தியா, சி. சிவசெந்தூரி - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**காட்டுருவச் சித்திரம்**

சா. அபிராமி, ஜெ. திவ்யா - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**கோப்பாய் கோட்டம்**

**பிரிவு I**

**கருத்துவெளிப்பாட்டுச்சித்திரம்**

க. வளர்மதி - ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம், க. மொறிக்சனா– ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், பா. சுரேஸ்குமார் - வாதராவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**ஆக்க அலங்காரச் சித்திரம்**

இ. நிருஷன் - வாதராவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், கே. நிரோசினி - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ம. கிருவன் – ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

**அச்சுப் பதித்தல்**

பு. மிதுலன் - வாதராவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், ச. தனிஸ்ரன் - ஸ்ரீ சோமாஸ்கந்தா வித்தியாலயம், த. கவிரஜன் - ஆவரங்கால் நடராஜா வித்தியாலயம்.

**பிரிவு II**

**கற்பனைச் சித்திரம்**

கு. யநோயன் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ம. யசிந்தன் – உரும்பிராய் இந்துக் கல்லூரி, இ. ஆனந்தராஜன் - உரும்பிராய் இந்துக் கல்லூரி.

**காட்டுருவச் சித்திரம்**

யோ. கதிர்சா - உரும்பிராய் இந்துக் கல்லூரி, றோ. கென்ஸ்ஜேரோன் - உரும்பிராய் இந்துக் கல் லூரி, ப. தன்சயன் - ஸ்ரீ சோமாஸ்கந்தா வித்தியாலயம். (இ)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு புதிய அலுவலகத் திறப்பு விழா பிரிவுத் தலைவர் இ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றபோது அருட்தந்தை கலாநிதி ஈ. ஜே. ஜெயரட்ணம் ஆசியுரை வழங்குவதையும் அருகில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி எலினா அஜ்மோன் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

20.05.2009

(வைகாசி 06, புதன்கிழமை

ஏகாதசி முன்னிரவு 11.46 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 9.33 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, சயன சுகக்குறைவு, பிதாசிந்தை. |
| இடபம் | தொழில் வருமானம், காரிய சித்தி, உறவினர் வருகை, மன மகிழ்ச்சி. |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, நல்ல செய்தி, நண்பர்கள் உதவி. |
| கடகம் | ஆன்றோர் ஆசி, அச்சமான நிலை, ஆரோக்கியக் குறைவு, பயணம். |
| சிங்கம் | எதிர்பாராத அச்சம், காரியதடங்கல், போசன சுகம், உடல் நலக் குறைவு. |
| கன்னி | அபூர்வ சந்திப்பு, பண வருவாய், திடீர் பயணம், முயற்சி கைகூடும். |
| துலாம் | சுகவாழ்வு, பணவருவாய், செய் தொழில் விருத்தி, சுவாரஸ்யம். |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, பணக்குறைவு, காரிய இடையூறு, ரோக நிலை. |
| தனுசு | பயந்த சுபாவம், புதிய விடயம், முயற்சி தாமதம், உடல் நலம். |
| மகரம் | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | கௌரவக்குறைவு, தனவிரயம், எடுத்த காரியம் தாமதமாகும், குடும்பக் கவலை. |
| மீனம் | நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 130 | 150 | 135 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 65 |
| தக்காளி | 320 | 360 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 80 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 50 | 60 | 60 |
| பூசணி | 20 | 30 | 25-50 |
| புடோல் | 70 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 65 | 60 |
| சின்ன வெங்காயம் | 35 | 50 | 55 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 180 |
| பாகற்காய் | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக் கிழங்கு | 35 | 50 | 65 |
| பயிற்றங்காய் | 90 | 120 | 85 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 35 | 40 | 30 |
| கறிமிளகாய் | 120 | 130 | 100 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 110 | 140 | 155 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 28-30 |

## நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விவசாய குழு, கணனிப் பயன்பாட்டு குழு என்பவற்றின் பணிகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். இரவீந்திரசர்மா தெரிவித்துள்ளார். (ஓ-36)

## நூலக விழிப்புணர்வு செயலமர்வு


(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட நூலக ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாசிரியர்களுக்கான நூலக விடேச செயற்றிட்டம் திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாது என்றும் இச்செயலமர்வு நாளையும், நாளை மறுநாள் (வியாழன், வெள்ளி) ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாண பொது நூலகத்தில் நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ)

## இசையால் இணைவோம் கரம் கொடுத்து உதவுவோம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன் கருதி விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகமும் இணைந்து வழங்கும் 'இசையால் இணைவோம்' கரம் கொடுத்து உதவுவோம் என்னும் இன்னிசை நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணி முதல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது. (ஓ-4)




## கலாபூஷண விருதிற்கான விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாபூஷண விருதிற்கு சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுப்புறவியல் சினிமா, இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற துறைகளில் சிறப்புச் சேவையாற்றிய அறுபது வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விண்ணப்பப்படிவத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

# சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் மே 31

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் இம்மாதம் 31 ஆம் திகதி சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளில் உள்ள க.பொ.த (சா/த) வகுப்பு மாணவர்களிடையே புகைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது.

இப்பரீட்சை 24 ஆம் திகதி ஞாயிறு காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மற்றும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யூன் மாதம் முதலாம் திகதி பி.ப 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உபஅலுவலக நூலகவார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய நூலக வாரத்தையொட்டி வேலணை பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட நயினாதீவு உப அலுவலக நூலகத்தில் பல நிகழ்வுகள் சபைச் செயலாளர் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இதில் முதல் நிகழ்வாக நயினாதீவில் உள்ள மூன்று பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தரம் 01 தொடக்கம் 13 வரை நூலகம் சம்பந்தமான கட்டுரை, கவிதை, பேச்சு, சிறுகதை ஆகிய போட்டிகள் 15.05.09 தொடக்கம் 18.05.09 வரை நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து நூல்கள் சேகரித்தல், நூலகம் சார்ந்த கருத்தரங்குகள் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மேலும் இந் நிகழ்வின் போது போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், கலை நிகழ்ச்சிகள், நூலக கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஓ)

## ஒப்பந்தக்காரர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கோரப்படும் கேள்விப்பத்திரங்கள், கூறுவிலைகள் என்பன கோரப்பட்ட திகதி, நேரத்திற்கு முன்பாக அலுவலக நேரத்தில் பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் பணிப்பாளர் அல்லது பதில் பணிப்பாளர் முன்னிலையில் ஒப்பந்தக்காரரினால் அல்லது, அவரது பிரதிநிதியால் மட்டும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும்.

வேறு, முறையில் அல்லது வைத்திய சாலை ஊழியர் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளோ, கூறுவிலைகளோ நிராகரிக்கப்படும்.

ஆதலால் ஒப்பந்தக்காரர்கள் இதனைக் கண்டிப்பாக பின்பற்றும்படி போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ. தேவநேசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயாரோகணேஸ்வரர் ஆலய இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயாரோகணேஸ்வரர் ஆலய பஞ்ச இரதோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேலும் இவ் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை புதிதாக அமைக்கப்பட்ட கைலாசவாகனத்தில் எம்பெருமான் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெற்றது.

நாளை பூந்தண்டிகையும் நாளை மறுதினம் காலை பிச்சாடனர் திருவிழாவும் மாலை குதிரை வாகனத்திருவிழாவும், 22 ஆம் திகதி காலை சந்தான கோபாலர் திருவிழாவும் மாலை சப்பறத்திருவிழாவும் 24 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 25 ஆம் திகதி மாலை திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## பிரதேச செயலக வளாகத்தில் துணிகர துவிச்சக்கரவண்டி திருட்டு

நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை துவிச்சக்கரவண்டி ஒன்று களவாடப்பட்டுள்ளது. மற்றுமொரு துவிச்சக்கரவண்டி பூட்டும் உடைக்கப்பட்டு திருவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு சூழ்நிலை பாதகமாக அமைந்ததால் கைவிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலகம் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருந்த போதே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-36)

## கல்விமாணிப் பரீட்சை மே 30இல்-யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் கல்விமாணிப் பட்ட நெறிக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தேசிய கல்வி நிறுவகத்தால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப்பட்ட நெறிக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர் இ. சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு இரதோற்சவமும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## சித்திரப்போட்டி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த கோப்பாய்கோட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## கலந்துரையாடல்

சமாதான நல்லிணக்கப் பணியகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமாதானக்கல்வி தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் 2 மணிவரை வண்ணை ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் அச்சுவேலி, செல்வநாயகபுர சனசமூக நிலையத்தில் கிராமியச் சிறுவர்களுக்கு சமாதானக் கல்வி விழிப்புணர்வு செயற்பாடுகள் பிற்பகல் 3.30 மணிமுதல் 4.30 மணிவரை நடைபெறும் என இணைப்பாளர் செல்வி சோபனா யோகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## தீவகத்தில் புதிய கோப்சிற்றிகள் திறப்பு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் துறையூரில் மினிகோப் சிற்றியொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அல்லைப் பிட்டியிலும் மண்டைதீவிலும் இரு மினி கோப் சிற்றிகளை திறந்து வைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டிருப்பதாக சங்க இயக்குநர் சபை தெரிவித்துள்ளது. (ஓ-4)





யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் க.பொ.த. சாதாரண் தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வில் [illegible] சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்கள், அதிபர் குழுவுடன் நிற்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும்

# மொழி-இலக்கியம்-பண்பாடு 02

கருத்துத் தொடர்பு (Communication) என்றால் என்ன? கருத்துத் தொடர்பு என்பது சமூக வயப்பட்டதாகும். சமூக வாழ்வு தொடர்ந்து நடைபெறுவதற்குக் கருத்துத் தொடர்பு அவசியமாகும். அதற்கேற்ப மனிதன் மிருகங்களோ பறவைகளோ அறியாத பல்வேறு வகையான மூலங்களினாற் பல கருத்துத் தொடர்பு முறைகளை அமைத்துக்கொண்டான். அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது மனிதப் பேச்சுமொழியாகும். நாம் கருத்துத் தொடர்பு கொள்கின்றோம் என்று கூறின் நமக்குள் ஏதோ வகையிலே ஒற்றுமைப்பாடு உண்டென்பது பெறப்படும். நான் என்ன கூறுகிறேன் என்பது எனக்குத் தெரிவது போல அதனைக் கேட்பவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பரஸ்பரம் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் ஒரு சமூகப் பிணைப் புக்கு அவசியமாக அமைகின்றது. கருத்துத் தொடர்பிலே ஈடுபடுவர்களென ஒரு மனிதக் குழுவையோ சமூகத்தையோ ஒரு பண்பாட்டைச் சார்ந்தவரையோ குறிப்பிடலாம். அவர்கள் யாவரும் தம்முடைய மொழி பழக்கங்கள் வழக்கங்கள் ஆகியன பற்றிய விதிமுறைகளை அனுசரித்து நடப்பவர்கள். அவ் விதிமுறைகளை அவர்களே உண்டாக்கினார்கள். அவர்களே அவற்றை அனுசரித்து நடக்க வேண்டியவர்களாயுமுள்ளனர்.

எனவே மொழி மூலமாக நடத்தப்படும் கருத்துத் தொடர்பும் சமூக வயப்பட்டது என்பது பெறப்படும். மனித மொழியினை மிருகங்களும் பறவைகளும் கைக்கொள்ளும் குறியீட்டு முறைத் தொடர்புடனே ஒப்பிடமுடியாது. ஏனெனில் அவற்றின் ஒலிக் குறியீடுகள் ஆக்கத் தன்மையற்றவனவாகும். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஏற்ற தூண்டுதல்களி னாலே அவை ஏற்படுவனவாகும். உணவைக் கண்டு தன் இனத்திற்குத் தெரிவித்தல், நெருங்கி வரும் அபாயத்தைக் கண்டு அல்லது உணர்ந்து பிறவற்றுக்கு அறிவித்தல், எதிர்ப்பாலுடன் சேர விரும்புதல் போன்ற உயிரியல் வயப்பட்ட தூண்டுதல்களால் அவை ஒலிக் குறியீடுகளை உண்டாக்குகின்றன.

இத்தகைய ஒலிக் குறியீடுகளாலேயே மிருகங்கள் பறவைகள் ஆகியன தத்தம் இனங்களுடன் கருத்துத் தொடர்பு கொள்கின்றன. இக் கருத்துத்தொடர்பு மிகக் குறுகிய சில குறியீடுகளாலேயே நடைபெறுகின்றது. வாழைப் பழத்தை விரும்பி உண்ணும் கிளி அவ் வாழைப்பழத்தை விரும்பிய போது ஓர் ஒலியை ஏற்படுத்தலாம். அல்லது மனிதராற் கற்பிக்கப்பட்ட சிறு சொற்களாலே கேட்கவுங் கூடும்.

ஆனால் அக்கிளி தான் உண்ணும் வாழைப்பழத்தைப் பற்றி வர்ணிக்கவோ அதனை உண்டதனால் ஏற்பட்ட கவலையைச் சொற்களினாற் கூறவோ வன்மையற்றதா யுள்ளது. நான்கு அல்லது ஐந்து வருடங்களாக வீட்டில் ஒரு கிளியை வைத்திருந்தாற்கூட அக்கிளிக்கு அத்தகைய ஆற்றல் ஏற் பட்டு விடாது. ஆனால் ஐந்து வயதுடைய எம் முடைய குழந்தையினை இச் சந்தர்ப்பத்திலே எண்ணிப் பாருங்கள். மிருகங்கள் பறவைகள் போலவே அவனோ, அவளோ அபாயம், நோபயம் முதலிய உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த 'ஆ', 'ஐயோ', 'ஊ', 'ம்ம்' போன்ற ஒலிக் குறியீடுகளை ஏற்படுத்தினாலும் தான் உண்ட வாழைப்பழத்தினைப் பற்றியும் அதன் சுவையினைப் பற்றியும் பல சொற்களாலே கதையளக்க கூடியவனாக அல்லது கதையளக்கக் கூடியவளாக உள்ளனர்.

மனிதன் மொழியினைக் கருவியாகக் கொண்டு சென்ற காலத்துப் பழமையினையும் நிகழ்கால நடைமுறைகளையும் எதிர்கால நிகழ்வுகளையும் பற்றியெல்லாம் பேசக் கூடியவனாயுள்ளான். தன் புலன்களால் உணரப்பபாத விடயங்களுக்கு அவன் பொருள் தெரிந்தவனாக இருக்கிறான். நடக்க முடியாத விடயங்கள் பற்றி மொழி கருவியாகப் பொய் கூறவும் வல்லவனாயுள்ளான் மிருகங்களாலே, பறவைகளாலோ இச் சாதனையைச் செய்ய முடியாது.

மொழிக்கும் கருத்துத் தொடர்புக்குமுள்ள தொடர்பினை நாம் தினந்தோறும் மேற் கொள்ளும் உரையாடல் மூலமாக விளங்கிக் கொள்ளலாம். இத்தொடர்பு பற்றிப் பல அறி வியல் ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அத்தகைய ஆய்வுகளின் விளைவா்க தகவற்கோட்பாடு, கருத்துத்தொடர்பின் கணி தக்கோட்பாடு போன்ற கோட்பாடுகள் உருவாகின. அக்கோட்பாடுகள் பற்றிய விரிவான விளக்கம் இங்கு தரப்படவில்லையெனினும் மொழியோடு தொடர்புடைய அவற்றின் சில சிறப்புப் பண்புகள் இங்கு குறிப்பிடப்படுகின் றன.

கருத்துத் தொடர்புக்கு தகவல் அவசியமாகும். தகவல் அனுப்பும் போது பிழைகள் ஏற்படின் அவற்றினை உடனடியாக இனங் கண்டு கொள்ளக்கூடியதாயிருக்க வேண்டும். மொழி மூலம் கருத்துத் தொடர்பு கொள்ளும்போது அத்தகைய பிழைகள் ஏற்படா வண்ணமும் அவ்வாறு ஏற்படின் அவற்றைக் கண்டு பிடிக்கக்கூடிய வண்ணமும் விதி முறைகள் கொண்டதாக மொழி அமைந்துள்ளது.

ஒரு மொழியிலுள்ள ஒலியன்கள் எண்ணுக் கடங்கா வகையிலே சேர்ந்து ஒலித் தொடர்களாக அமையலாம். அத்தகைய ஒலித் தொடர்களுட் சில சேர்க்கைகள் உண்டாகா வண்ணம் அம்மொழியிலுள்ள சில விதி கள் தடுக்கின்றன. உதாரணமாகத் தமிழ் மொழியிலுள்ள பின்வரும் விதிகளை நோக்குக.

அ. இனமல்லாத இரண்டு மெல்லொலிகள் அல்லது மெல்லெழுத்துக்கள் அருகருகே இடம்பெறமாட்டா

ங்ஞ், ம்ண், ந்ம், ஞ்ன் முதலியன

ஆ. ந் மெல்லொலியைத் தொடர்ந்து த் வல்லின மெய் மாத்திரமே வரும். பந்து சொந்தம் சந்தி முதலியன.

இ ை வ



போன்று எத்

தனையோ வித்

கள்தமிழ்மொழி

யிலே இருக்

கின்றன. இவ்

விதிகள் கருத்

துத், தொடர்

பிலே பிழை ஏற்

படின் அவற்

றை உடனடி

யாக இனங்கண்டு கொள்ள உதவுவனவாகும். ஆகவே தமிழ் மொழியில் முப்பது எழுத்துக்கள் முலம் (ஒலியன்கள் பற்றி இங்கு குறிப்பிடவில்லை) எத்தனையோ பொருளற்ற தொடர்களை ஆக்க முடியு மெனினும் பொருளுள்ள தொடர்களை ஆக்கக்கூடியதாகவே அம்மொழி அமைந்துள்ளது. அதற்குப் பொருளைப் புலப்படுத்தும் பேச்சுச் சந்தர்ப்பம் துணை புரிகின்றது. இவ்விடத்தில் மனிதக் காதின் அபார திறமையைப் பற்றி ஒரு விடயம் கூற வேண்டியுள்ளது.

செய்திகளைக் கேட்குஞ் சந்தர்ப்பத்திலே தேவையானவற்றை விடுத்துச் சரியான தகவலை அறிந்துகொள்ளும் திறன் மனிதக் காதுக்கு உண்டு செரி (Cherry) என்னும் மொழியியல் விஞ்ஞானி இதனையொட்டி ஒரு பரி சோதனையை மேற்கொண்டார். ஒரு மனி தன் ஒலிப்பதிவு நாடா மூலம் ஒரு காதால்


**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

ஒலியரவமுள்ள பொருளற்ற செய்திகளைக் கேட்கும் சந்தர்ப்பத்தில் மறுகாதால் பொருளுள்ள செய்தி ஒன்றிணைக் கேட்க வேண்டியேற்பட்டது. அம் மனிதன் ஒலியரவங்களை விடுத்து பொருள் உள்ள செய்தியினை எவ்வித கஷ்டமுமின்றி அறிந்து கொண்டானாம். அவ்வாறு ஒருவன் பொருள் உள்ள செய்தியினை அறிந்து கொள்ளவதற்கு பேச்சுச் சுதந்திரமே துணைபுரிக்கின்றது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

64



அடிஸ் அபாவில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்ததும் அங்கு போவதற்கு முன்னரே அவரது கடவுச்சீட்டு காலாவதியாக்கப்பட்டது. கென்யாவை விட்டு வெளியேற முடியாமல் போய் விட்டது.

கடைசியாக அவர் நீர் வடிகால் துறையில் சிறிய பணி ஒன்றிணை ஏற்றுக்கொண்டார். இதுவும் கூட அவருடைய நண்பனின் கருணையால் கிடைத்த பிரசாதம் தான். இந்தப் பணி அவரின் மேசைக்கு சாப்பாடு வரச்செய்ய போதுமானது. ஆனால் அவருக்கு இது பெரிய வீழ்ச்சி. ஆகவே கிழவன் மிகுதியாக குடிக்க தலைப்பட்டார். அவருக்குத் தெரிந்த பலர் அவரிடம் வருவதையே நிறுத்தி விட்டனர். அவரைக் காண்பதே அவர்களுக்கு ஆபத்தாகி விடும் என்று பயந்தனர். அவர்கள் அவர் மனம்மாறி மன்னிப்புக் கேட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று புத்திமதி கூறினர். அதை விடுத்து தனது மனதில் எழுந்தவற்றையெல்லாம் அப்பட்டமாக கொட்டித்தீர்த்துவிடுவார்.

ஒளமாவுக்கு இவையெல்லாம் அவள் வளர்ந்த பின்புதான் தெரிய வந்தன. ஆனால் அவளுக்கு வீடு குழப்பமும் துன்பமும் நிறைந்ததாக இருப்பதை ஒருவாறு உணர முடிந்தது. கிழவன் ஒளமாவுடனோ அல்லது றோயுடனோ பேசு வதே இல்லை. சதா எரிந்து விழுந்து கொண்டிருப்பார்.

வீட்டுக்கு குடி போதையில் தான் வருவார். றூத்துடன் சண்டையிட்டு சத்தம் போடுவார். றூத் வெறுத்தாள். கிழவன் மாறி விட்டார் என்று மனம் வருந்தினாள். குழந்தைகளைப் பார்த்து இரங்கினாள் இருந்தாலும் தனது குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் பேதம் காட்டினாள் . ஒளமாவும் றோயும் தன்னுடைய குழந்தைகள் இல்லை என்பாள் அவர்கள் இருவரும் கைவிடப்பட்ட அநாதைகளாக உணர்ந்தனர். றூத் கிழ வனை விட்டுச் சென்ற பின்னரும் அநாதைகளாகத்தான் இருந்தனர்.

ஒளமா 12 அல்லது 13 வயதாய் இருக்கும் போது அவள் விட்டுச் சென்று விட்டாள் இதற்கு முன்தான் கிழவன் மோசமான கார் விபத்தில் சிக்கினார். குடிபோதையில் கார் ஓட்டிய போது வெள்ளைக்காரர் ஒருவருடைய காரில் மோதி அவர் இறந்து விட்டார். ஒருவருடம் வரை கிழவன் படுத்த படுக்கையாகி ஆஸ்பத்திரியில் கிடந்தார்.

றோயும் ஒளமாவும் தன்னந்தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரியால் வெளிவந்ததும் கிழவர் ஒபாமாவையும் அவரின் தாயையும் பார்ப்பதற்காக ஹவாய் சென்றார்.

விபத்தில் அகப்பட்ட பின் அவர் பார்த்து வந்த தொழிலும் பறி போய் விட்டது. சிறிது காலம் சொந்தக்காரர்களின் தயவில் வாழ வேண்டி ஏற்பட்டது.

அவர்களால் எவ்வளவு காலம் இந்தக் குடும்பத்திற்கு ஆதரவு தர முடியும்? சொந்தங்கள் அவர்களை வெளியேற்றி விட்டனர். பின்னர் அவர்கள் ஒளமா ,றோய் கிழவர் ஆகிய மூவரும் நகர்ப்புற ஒதுக்கத்தில் பழம் வீடு ஒன்றில் பல காலமாக வாழ்ந்து வந்தனர்.

அது உண்மையில் மிகவும் பயங்கரமான காலம் கிழவரிடம் பணம் கிடை யாது உணவுக்காக உற்றார்களிடம் கடன் பெறும் நிலை. இதனால் தன்மானம் இழந்ததில் வெக்கித் தலை குனிந்தார். கோபம் மேலிட தான் எந்த விதத்திலும் குற்றம்,பழியற்றவர் என்று இறுமாந்து பேசுவார். குழந்தைகள் -டாக்டர் ஒபாமாவின் குழந்தைகள் என்று வீண் பெருமிதம் கொள்வார். போலிவாழ்வு ,தானதர்மம் செய்வார். வீட்டில் சாப்பிடுவ தற்கோ ஒன்றுமிராது.

எப்போதெல்லாம் ஒளமான் அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி வாதிடுவாளோ அப்போது அவர் நீங்கள் குழந்தைகள் ஒன்றும் விளங்காது. என்று அதட்டிவிடுவார். றோயும் அவரும் பயங்கரமாக சண்டை போடுவார்கள். றோய் வீட்டை விட்டுச் சென்று விட்டான். அவன் வீட்டுக்கு வராமல் யாருடனோ வாழ்ந்தான். ஒளமாவும் கிழவரும் தனித்து விடப்பட்டனர்.

ஒளமா சில வேளைகளில் தந்தை வரும் வரையும் நடு நிசியிலும் விழித்திருப்பாள். குடித்துவிட்டு தள்ளாடிக்கொண்டு வந்து தன்னைப்பற்றி பேசுவார்.

### ஜம்பொன்

கென்யா உயர் நிலைப் பள்ளியில் தான் ஒளமா படித்தாள். அந்தப் பள்ளி பிரித்தானிய குழந்தைகளுக்கென்று கட்டப்பட்டது. கறுப்பர்களுக்கு அப்பள்ளியில் இடம் கிடையாது. அவர்கள் நாட்டை விட்டுப்போன பிறகுதான் கென்ய மாணவிகளுக்கு அங்கே படிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அது மாணவ விடுதியுள்ள பாடசாலை விடுதியில் இருந்து தான் ஒளமா படித்தாள்.

(தொடரும்)

# பிரபாகரன் நலமுடன் இருக்கிறார்

## பழ. நெடுமாறன் பேட்டி



(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாக இலங்கை அரசின் தொலைக்காட்சி சொல்லிவருகிறது. இதனால் உலகத்தமிழர்கள் மத்தியில் அதிர்ச்சி நிலவுகிறது.

இந்நிலையில் நேற்று இரவு சென்னையில் உள்ள கொங்கு தமிழ் அறக்கட்டளையில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களான பழ நெடுமாறன், வைகோ, ராமதாஸ்,தா. பாண்டியன் ஆகியோர் ஒன்று கூடி இலங்கையின் தற்போதுள்ள நிலைமை குறித்து தீவிரமாக ஆலோசனை செய்தனர்.

இந்த ஆலோசனைக்கூட்டத்திற்கு முன்பாக பழ. நெடுமாறன் செய்தியாளர்களை சந்தித்தார்.

• பிரபாகரன் இறந்துவிட்டதாக வரும் செய்திகள் உண்மையா? பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? பிரபாகரன் நலமுடன் தான் இருக்கிறார்.


எப்படி இவ்வாறு உறுதியுடன் சொல்கிறீர்கள் .நீங்கள் அவருடன்பேசினீர்களா? நான் சொல்வதை வைத்தே புரிந்து கொள்ளுங்கள். இலங்கை பிரச்சினையில் உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன்? மே-21 இல் தமிழகம் முழுவதும் இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக மாபெரும் எழுச்சி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தார். (ஓ-4)

# இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு அண்ணா வழியில் அயராது பாடுபடுவேன்

## முதலமைச்சர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

பாராளுமன்ற தேர்தல் வெற்றிக்கு நன்றி என்றும் இலங்கை தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு அயராது பாடுபடுவோம் என்றும் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதலமைச்சர் கருணா நிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை தமிழர் பிரச்சினையில் இன்னும் காட்டப்பட வேண்டிய அக்கறையை காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் நானும் தெளிவுபடுத்தியிருப்பதுடன் இந்த தேர்தல் முடிவுக்கு பிறகும் அதனை மத்திய அரசுக்கு நாள்தோறும் நினைவூட்டி கொண்டிருக்கின்றேன்.

அங்கே உருவாக்கப்படவேண்டிய அரசியல் தீர்வுக்கும் அமைதி தெளிவுக்கும் அண்ணா வழியில் நான் அயராது பாடுபடத்தான் போகின்றேன் என்றார். (ஓ-4)


# பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2009
# இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு சாலைகளிற்கான 01.07.2009 தொடக்கம் 30.06.2010 வரையான காலப்பகுதிக்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்பு சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1.யாழ். சாலை | காலை | 0600 -1800 -05 பேர் |
| | மாலை | 1800 -0600 -06 பேர் |
| 2.யாழ். பேருந்து நிலையம் | காலை | 0600 -1800 -03 பேர் |
| | மாலை | 1800 -0600 -02 பேர் |
| 3.மல்லாகம் வேலைத்தளம் | காலை | 0600 -1800 -01 ஆள் |
| | மாலை | 1800 -0600 -01 ஆள் |
| 4.பருத்தித்துறைச்சாலை | காலை | 0600 -1800 -03 பேர் |
| | மாலை | 1800 -0600 -03 பேர் |
| 5.காரைநகர்ச்சாலை | காலை | 0600 -1800 -03 பேர் |
| | மாலை | 1800 -0600 -03 பேர் |
| 6.மன்னார்சாலை | காலை | 0600 -1800 -03 பேர் |
| | மாலை | 1800 -0600 -03 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு 01 நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தை குறிப்பிடவும்.

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள்:**

1. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**Private Security Service from 01.07.2009 to 30.06.2010**" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "**The Secretary, Tender Board, Sri Lanka Transport Board (North), Palaly Road, Kondavil**" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. சேவைகள் திருப்தியற்றதாக காணும் பட்சத்தில் ஒரு மாதகால முன்னறி வித்தலுடன் சேவை இடை நிறுத்தம் செய்யப்படும்.
3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.

1. பெயரும் விலாசமும்
2. தொலைபேசி இல
3. சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும்
4. சேவையின் தன்மை
5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்
6. வங்கியின் பெயர்.

***விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் திகதி:-2009.06.15***

*குறிப்பு:-கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்*

**க.கணேசபிள்ளை**
பிராதன பிராந்திய முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு),
கோண்டாவில்.


# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முடிவேயில்லை ; தமிழர்கள் வேறு விதப் போராட்டங்களில் ஈடுபடுவார்கள்

## கம்யூனிஸ்ட் கட்சி செயலர் தா. பாண்டியன் தெரிவிப்பு

(சென்னை)



தமிழர்கள் கொதித்துப் போய் இருக்கின்றார்கள். அவர்கள் வேறுவிதமான போராட்டங்களில் ஈடுபடுவார்கள் என இந்திய கமயூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில் ,

இலங்கை பிரச்சினை தேர்தலில் எதிரொலிக்க வில்லை என்று கூறுவது தவறு. அங்கு தமிழர்கள் படும் இன்னல்கள் பற்றி அறிந்த தமிழர்கள் கொதித்து போய் இருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் அனைவரையும் வென்று விட்டதாக அந்த அரசு நினைக்கலாம். ஆனால் இந்த பிரச்சினைக்கு முடிவே கிடையாது. வேறுவிதமான போராட்டங்களில் அவர்கள் ஈடுபடுவார்கள் அதன் பாதிப்பு தமிழகத்திலும் எதிரொலிக்கும் என்றார். (ஓ-4)

# பன்றிக் காய்ச்சல் குறித்து கண்காணிக்க 24 மணி நேர கண்காணிப்பு மையம்

(சென்னை)

பன்றிக் காய்ச்சல் தொற்று குறித்து கண்காணிக்க தெரிந்து கொள்ள 24 மணி நேர அவசர கண்காணிப்பு மையம் அமைக்கப் பட்டுள்ளதாக தமிழக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை செயலர் சுப்புராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு,

விமான நிலையங் கள் துறைமுகங்களில் வந்திறங்கும் சர்வதேச பயணிகளை தமிழக மருத்துவக் குழுவினர் தீவிர பரிசோதனை செய்கின்றனர். பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குனரகத்தின் சார்பில் 24மணி நேரமும் இயங்கும் அவசர கண்காணிப்பு மையம் பன்றிக் காய்ச்சல் தொற்று குறித்து தீவிரமாக கண்காணித்து வருகிறது. (ஓ-4)

# இந்திய தேர்தல் ஜனநாயகத்தை வலுப்படுத்தியுள்ளது

## வாழ்த்துச் செய்தியில் ஒபாமா



(வோஷிங்டன்)

அண்மையில் நடைபெற்ற லோக்சபா தேர்தல் , இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்தியதோடு சுதந்திரத் தன்மைக்கும் உறுதியூட்டியுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது ,

உலகிலேயே அதிகமான மக்கள் ஜனநாயக முறையில் வாக்களித்துள்ளனர். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைத் தொடரும் மன்மோகன் சிங் அரசுக்கு எனது வாழ்த்துக்கள் . பலதரப்பு மக்களைக் கொண்ட ஒன்றுபட்ட இந்தியா ,எமக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது. எனவே இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டு உறவைத் தொடர்வோம். (ஓ-4)

# இலங்கையில் பிரபாகரனின் துயர மரணம் ; அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## என். வரதராஜன் அறிக்கை

(சென்னை)

இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கம் பிரபாகரனின் மரணம் உள்ளிட்ட ஒரு துயர முடிவை சந்திக்க நேரிட்டுள்ளது. இலங்கையில் துயர் துடைப்பு மற்றும் அர சியல் தீர்வுக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.,

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் என்.வரதராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் வடக்குப் பகுதியில் நீடித்துத் தொடர்ந்த இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமான ஆயுத மோதலில் விடுதலைப்புலிகள் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மரணம் உள்ளிட்ட ஒரு தூயர முடிவை சந்திக்க நேரிட்டுள்ளது. இந்த இராணுவ மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொடுமையான பாதிப்புக்கு இலக்காகி நின்றுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் முடிவுக்கு வந்ததாக அறிவித்துள்ள இலங்கை அரசு அந்நாட்டில் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்து நீடித்து வந்துள்ள இனப்பிரச்சினைக்கு கூடுதல் அதிகாரப் பகிர்வு சுயாட்சி உரிமை என்ற அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கான முயற்சிகளில் உடனடியாக ஈடுபட வேண்டும் என்று மார்க்சிஸ் கட்சி வலியுறுத்துகிறது என்று அவ்வறிக்கையில் கூறப்படுகிறது. (ஓ-4)



# மரண அறிவித்தல்



யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை **M.T.** ***சரத்ஜீவன்*** அடிகளார் 18.05.2009 திங்கட்கிழமை மாரடைப்பு காரணமாக கிளிநொச்சியில் இறைபதம் அடைந்தார். அடிகளாரின் இறு திச் சடங்குகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
ஆயரின் செயலர்,
யாழ். ஆயர்இல்லம்.

(சி.2482)





இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக் கிளையில் "சனிக்கிழமை வங்கிச் சேவை" ஆரம்ப வைபவத்தின் போது இலங்கை வங்கி வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜயேந்திரா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் நிற்பதை முதலாவது படத்திலும், வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் உரை நிகழ்த்துவதையும், அருகில் மேற்தரக் கிளை முகாமையாளர் எஸ். பி. அரசகுமார் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களின் எண்ணிக்கை 2,51,861 ஆக அதிகரிப்பு

## தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 51 ஆயிரத்து 861 ஆக அதிகரித்துள்ளது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இந்நிலையில் பொதுமக்களை மீட்கும் படையினர் மனிதாபிமானப் போர் நடவடிக்கைகளின் இறுதி 84 மணித்தியாலத்தில் மட்டும் 65 ஆயிரத்து 617 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அந்நிலையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக நிலையம் மேலும் கூறியதாவது,

வடக்கு கிழக்கு மாகாணங்களின் போர் பிரதேசங்களில் சிக்கியிருந்த பொதுமக்களை மீட்கும் முகமாக இராணுவத்தினர் ஆரம்பித்த மனிதாபிமான படை நட்வடிக்கைகள் தற்போது நிறைவடைந்து விட்டன.

இந்நிலையில் அப் பிரதேசத்தில் சிக்கியிருந்த பொதுமக்கள் அனைவரும் இராணுவத்தின் 53, 58, 59 ஆவது படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இவ்வாறாக விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகளின் போதான இறுதி 24 மணித்தியாலக் காலப்பகுதியில் மட்டும் இராணுவத்தின் 59 ஆவது படையணியினர் 11 ஆயிரம் பொதுமக்களை மீட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவத்தின் 53 ஆவது படையணியினர் ஆயிரத்து 892 பேரையும் 58 ஆவது படையினர் 61 பொதுமக்களையும் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## ஸ்ரீராம கிருஷ்ண தரிசனம் படக்கண்காட்சி

இந்தியா, மைசூர் இராமகிருஷ்ண வித்தியாசாலையில் உள்ள ஸ்தாபனம் வெளியிட்ட ''ஸ்ரீராமகிருஷ்ண தரிசனம்'' 40 படங்கள் கொண்ட கண்காட்சி பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவா ஆச்சிரமத்தால் பல பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளதாக சாரதா சோவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (ஓ-4)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 500 பேருக்கு தொழிற்பயிற்சிக்கான புலமைப்பரிசில்

## யு.எஸ்.எயிட் அமைப்பின் செயல்திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள 500 இளைஞர், யுவதிகளுக்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் தொழில் பயிற்சிக்கான புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரான யு. எஸ். எயிட் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் றெபேக்கா கோன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சிக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே றெபேக்கா கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஹோப் இன் ஹோட்டலில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்துரையாற்றிய அவர், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜன்சியினூடாக அமெரிக்க மக்கள் ஏறத்தாழ 50 வருடங்களாக உலகம் முழுவதிலுமுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்திக்கான உதவிகளையும், மனிதாபிமான உதவிகளையும் வழங்கி வந்துள்ளனர்.

இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் நன்மைக்காக 1946 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜன்ஸி இலங்கையில் ஏறத்தாழ இரண்டு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 500 இளைஞர்களுக்கு இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

வரையறையற்ற ஆற்றலுள்ள பங்காண்மை நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது ஆடை, ஊடகங்கள், சுற்றுலாத் துறை என்ற மூன்று தொழில்களும் தொடர்பாக வரையறையற்ற பங்காண்மை, தொழிற் சேனைப் பயிற்சித் திட்டங்களை வழங்குகின்றது.

விவசாயக் கல்வி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### எலுமிச்சை

Botanical Name - Citrus aurantifolia
Family - Rutaceae
Engl -Acid Lime
Sing -Dehi

முட்கொண்ட புதர்ச்செடி அல்லது சிறிய பரந்த மரம். இலைகள் தடித்தவை; காம்பு இறகு கொண்டது ; மடல் முட்டை வடிவானது ; நுனி கூரானது அல்லது மொட்டையானது ; மலர்கள் சிறியவை ; வெள்ளை அல்லது றோஸ் நிறம் கொண்டவை ; 510 மலர்கள் ரெசிம் வகை மஞ்சரியில் அமைந்தவை. கனிகள் கோள வடிவானது அல்லது முட்டை வடிவானது ; மேலுறை மெல்லியது ; நெருக்கமாக ஒட்டியது ; கனிந்த நிலையில் மஞ்சள் வண்ணமும் நறு மணமும் கொண்டது ; விதைகள் முட்டை வடிவானது. சித்திரை, வைகாசி மாதங்களில் மலரும்.

**இனவிருத்தியும், பரம்பலும்**

பெரும்பாலும் விதை மூலமாக இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. மொட்டு ஒட்டு மூலமும்இனப்பெருக்கம் செய்யலாம். ஓராண்டு வயதுடைய கன்றுகள் நடுவதற்கு பயன் படுத்தப்படுகின்றன. 2-3 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். எலுமிச்சை 25 ஆண்டுகள் வரை நல்ல பலனைத் தரும். எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். சிறு கன்றுகளை 6 மீற்றருக்கு ஒன்றாக நடவும்.

**100 கிராம் எலுமிச்சம் பழத்திலுள்ள சத்துக்கள்.**

புரதம் 1.5 கிராம், கொழுப்பு 1.0 கிராம், நார்ப்பொருள் 1.3 கிராம், காபோர்வைதரேற்று 10.9 கிராம், கல்சியம் 90 மி.கி, பொஸ்பரஸ் 20 மி.கி, இரும்பு 0.3 மி.கி, விற்றமின் 'C' 63 மி.கி, கரோட்டின் 15 மைக்ரோகிராம்.

**மருத்துவப் பயன்கள்**

◆ உலர்ந்த எலுமிச்சம் பழத்தோலை சீயாக்காய், உலர்ந்த கறிவேப்பிலை, வெந்தயம், பச்சைப்பயறு ஆகியவற்றுடன் கலந்து அரைத்து தலையில் நன்கு தேய்த்து குளித்து வர பொடுகு நீங்குவதுடன் தலைமயிர் வளருவதற்கும், கருமையாவதற்கும் உதவும். உடலில் தேய்த்துக் குளிக்க மேனி அழகு பெறும்.



◆ எலுமிச்சை சாறுடன் தேனையும் சமமாகக் கலந்து, ஒரு அவுன்ஸ் அளவு சாப்பிட்டுவர மண்ணீரலை பலப்படுத்தி மலேரியா சுரத்தையும் தணிக்கும்.

◆ அவ்வப்போது எலுமிச்சை சாற்றை உடலுக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், நமைச்சல், அரிப்பு, சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய தோல் வியாதிகள் தீரும்.

◆ எலுமிச்சம் சாற்றை சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாய்களில் உறைந்திருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றி இரத்தத்தை தூய்மைப்படுத்தும்.

◆ எலுமிச்சை சாற்றில் 'சிட்ரிக்கமிலம்' இருப்பதனால் வெறும் சாற்றை சாப்பிடுவதை விட, வெந்நீரிலோ, தேனிலோ அல்லது வேறு ஏதேனும் பழச்சாறுடனே கலந்து சாப்பிடுவதே நலம்.

◆ கர்ப்பம் தரித்து நான்காவது மாதத்திலேயே காலையும், மாலையும் எலுமிச்சம் சாற்றை தண்ணீரில் கலந்து அதில் ஒரு கரண்டி தேனையும் கலந்து சாப்பிட்டு வந்தால் பிரசவம் இலகுவாகும்.

◆ தோலின் மீது எந்த நோய் ஏற்பட்டிருந்தாலும் எலுமிச்சை ரசத்தில் மஞ்சள், கடுகு இலைகளை பொடி செய்து போட்டு நன்றாக குழைத்து மேலே பற்றுப் போடலாம்.

◆ உள்ளிப் பூண்டை நன்றாக அரைத்து அத்துடன் எலுமிச்சை சாற்றையும் கலந்து தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால் தலையிலுள்ள பேன்கள் அழியும்.

◆ எலுமிச்சம் பழச்சாற்றை உப்பைக் கலந்து தேள் கொட்டிய இடத்தில் பூசினால் கடு கடுப்பு நீங்கும்.

◆ எலுமிச்சையை வெட்டி அதில் இந்துப்பு, சுக்கு, இலைகளை பொடிசெய்து தூவி, அப்படியே வாயில் போட்டு சுவைத்தால் மலச்சிக்கல் நீங்கும்.

◆ எலுமிச்சம் பழரசத்தில் ஓரிரவு சீரகத்தை ஊறவைத்து வெயிலில் நன்கு உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனை வேண்டும் போது சிறிது எடுத்து மென்று சாப்பிட்டு வெந்நீர் அருந்த குமட்டல், பசியின்மை, பித்தவாந்தி, பித்தமயக்கம் தீரும்.

◆ குளிர்ந்த நீரில் எலுமிச்சம் பழச்சாற்றை கலந்து சிறிதளவு தேன் சேர்த்து நாள்தோறும் அருந்தி வர உடற்பருமன் குறையும்.

◆ எலுமிச்சம் பழச்சாறு ரசம் 300 மில்லி, 50 கிராம் இந்துப்பு, 150 கிராம் சீரகத்தூள் ஆகியவற்றை நன்கு கலக்கித் தினம் காலை, மாலை என 20-30 தினங்கள் 1-2 கிராம் அளவு அருந்திவர வயிற்றுக் கோளாறு பித்தத்தினால் உண்டாகும் வெப்பம் நிற்கும்.

◆ வெள்ளைக் கரிசலாங்கண்ணி இலைச் சாறு 100 மில்லி, எலுமிச்சம்பழச்சாறு 100 மில்லி, பசுவின்பால் 100 மில்லி, நல்லெண்ணெய் 300 மில்லி எடுத்து சட்டியிலிட்டு சுண்டக்காய்ச்சி தலைக்குத் தினம் தடவிவர முடி நன்கு கறுத்து, நீளும், முடி நரைக்காது.

◆ எலுமிச்சம் பழச்சாற்றில் சிறிது உப்பும், தண்ணீரும் கலந்துண்ண காய்ச்சலின் போது ஏற்படும் தொண்டை வறண்டு போதல் நீங்கி, சிறுநீர் நன்கு வெளிப்படும்.

◆ எலுமிச்சம்பழச்சாற்றுடன் மோர் கலந்து கொடுக்க கோடை காலத்தில் ஏற்படும் உடல் உஷ்ணம் தணிந்து உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும்.

◆ விதை முற்றாத எலுமிச்சம் பிஞ்சை ஊறுகாய் போட்டு தினமும் உணவோடு சேர்த்து உட்கொண்டு வந்தால் மலக்கட்டு நீங்கி, பித்தம் தணிந்து, இரத்த மூலம் தணியும்.

◆ எலுமிச்சம் பழத்தை துண்டுகளாக்கி துணியில் பொட்டலமாகக் கட்டிக் காய்ச்சிய நல்லெண்ணெயில் தொட்டு ஒத்தடம் கொடுக்க என்புகளின் இணைப்புகளில் உண்டாகும் வலி போகும்.

◆ எலுமிச்சை தளிர் இலைகளை நன்கு மைபோல் அரைத்து வெண்ணெயில் கலந்து ஓர் இரவு வைத்திருந்து நெய்யாக்கி சேமித்து வைத்துக்கொண்டு வாதம், சுளுக்கு, வீக்கம் ஆகியவற்றுக்கு தடவ நல்ல பலன் தெரியும்.

◆ இளம் தளிர்களை உலர்த்தி மஞ்சள் பொடியுடன் கலந்து பொடித்து முகத்தில் தேய்த்து வைத்திருந்து குளிக்க சிறுபருக்கள் குணமாவதுடன், முகம் ஒளியும், அழகும் பெறும்.

◆ எலுமிச்சம் பழரசத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை சமனிடை சேர்த்து சிறிதளவு சீனி சேர்த்து ஒரு மண்பானையில் போட்டு மேல்மூடி இறுக்கிக் கட்டி பூமியில் 40 நாட்கள் புதைத்து வைத்து பின் எடுத்து வடித்து வைத்துக் கொண்டு அன்றாடம் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி, கை, கால் உளைச்சல், பசியின்மை, அஜீரணம் தீரும். ■■■

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

# புத்தாண்டில் உங்கள்

# வைகாசி மாதப் பலன்கள்

## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள்)**

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மிதுன ராசி நேயர்களே!**

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாத தொடக்கத்தி லிலேயே குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பீர்கள். செவ்வாய் சுக்ர சேர்க்கையால் இடம் ,பூமி சம்பந்தப்பட்ட வகையில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

உடன்பிறப்புகள் வழியில் அனுசரித்து செல்வது நல்லது. உடல் நிலையில் சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும் , ஆரம்பத்தி லேயே மருத்துவ ஆலோசனைகளை கேட்டு நடந்து கொள்வது நல்லது. அதிசாரமாக வரும் குருவின் பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைவதால் அந்த அடிப்படையில் நீண்ட நாள் வழக்குகள் நல்ல முடிவுக்கு வர லாம். உத்யோகத்தில் உயர்வு கிட்டும். உட னிருப்பவர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்த படியே கிடைக்கும்.

கடன் சுமைகளை படிப்படியாக குறைத் துக்கொள்வீர்கள். கவலைப்படும்படியாக நடந்து கொண்ட பிள்ளைகள் இனி உங்க ளுக்கு கைகொடுத்து உதவப் போகிறார்கள். என்ன இருந்தாலும் வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து சொல்வது நல்லது. அப் பொழுது தான் சொன்ன சொல்லை காப் பாற்ற இயலும்.

மே 22 முதல் மேஷத்தில் செவ்வாய் சஞ் சரிக்கப் போகிறார். எனவே ,உங்கள் கனவு இல் லங்களை கட்டி மகிழப்போகிறீர்கள். அல் லது கட்டிய வீட்டை விலைக்கு வாங்கி குடி யேறப்போகிறீர்கள். பூமியால் யோகம் பெறும் இந்த நேரத்தில் பூமி விற்பனை யாளர் களுக்கு பொருள் வளம் குவியும். பங்காளிப் பகை மாறும்.

மே 30ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். புதனும் சுக்ரனும் இணைந்து செயல்படும் இந்த நேரத்தில் புத-சுக்ர யோகம் உருவாகிறது. எனவே தொட்ட காரியம் வெற்றி பெறும். தொல்லை கள் அகன்றோடும் தொழில் வளர்ச்சி எதிர் பார்த்ததைக் காட்டிலும் இருமடங்காக இருக் கும்.

ஜூன் 5ஆம் திகதி தன பஞ்சமாதிபதி புதன் சூரியனுடன் கூடி புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக, நல்ல வாய்ப்புகள் உங்கள் இல்லம் தேடி வந்து சேரும்.அரசு வழியில் அனுகூலம் கிடைக் கும். பொது வாழ்வில் அதிக ஆர்வம் காட்டு வீர்கள். புதிய திருப்பங்கள் பலவும் ஏற்படும் நேரமிது.

அதிசாரமாக வந்த குருவின் பார்வை உங்கள் ராசிக்கு மூன்றாமிடமான சகாய ஸ்தானத்தில் பதிவதால் சகல காரியங்க ளிலும் வெற்றி கிடைக்கும் வாய்ப்பு உண்டு. இருப்பினும் ஜூன் 11இல் அது வக்ரம் பெறு வதால்,குரு வழிபாட்டை முறையாக மேற் கொண்டால் குழப்பங்கள் தீரும்.

பார்க்கும் குருவை பலப்படுத்தினால் கேட் கும் உதவிகளைச் செய்ய மற்றவர்கள் முன் வருவர்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய**

**பொது நலத்தில் ஈடுபட்டு புகழை குவிக்கும் கடக ராசி நேயர்களே!**

வைகாசி மாதம் உங்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும் என்றாலும் ,செலவு நடைகள் கூடலாம். செல்வாக்கு மிக்க நீங்கள் சில நேரங்களில் கொள்கைகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பதால் யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பது நல் லது.ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

அடுத்தவர்களுக்காக எடுக்கும் முயற்சி யில் ஆதாயம் காணும் நீங்கள், இம் மாதம் அதிலும் சில தடைகளைச் சந்திக்க நேரிடும். அஷ்மத்தில் குரு சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஒரு சில திடீர் இடமாற்றம் ,ஊர் மாற்றம்,வீடு மாற்றங்களைச் சந்திக்க நேரி டலாம்.

ஆனால் இந்த மாற்றம் நிரந்தர மாற்ற மல்ல. அதிகார குருவின் பலத்தால் வரும் மாற்றம் ஸ்திரமானதாக இருக்குமா? என்பது சந்தேகம் தான்.

எல்லா மாற்றங்களையும் விட வாகனம் வைத்திருப்பவர் வாகன மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும். இல்லையேல் வைத்திருக்கும் வாகனத்தால் சில இடர்பாடு கள் ஏற்படலாம். வீண் விரயங்களும்,விபத் துக்களும் ஏற்படாமலிருக்க வியாழன் வழி பாடு உங்களுக்கு கை கொடுக்கும்.

சர்ப்ப தோஷத்தின் பிடியில் உங்கள் ராசி இருப்பதால் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொண்டால் சந்தோஷத்தை வர வழைத்துக்கொள்ள இயலும்.

மே 22ஆம் திகதி மேஷ ராசியில் செவ் வாய் சஞ்சரிக்கப்போகிறார். யோகாதிபதி செவ் வாய் தொழில் ஸ்தானத்தில் பலம் பெறும் இந்த நேரத்தில் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் வில குவர். சொத்துக்களால் லாபம் உண்டு புதிய திட்டங்கள் தீட்டி அதில் வெற்றி காண்பீர்கள்.

மே 30 ஆம் திகதி மேஷத்தில் சுக்ரன் சஞ் சரிக்கப் போகிறார். இதன் விளைவாக கூட்டு கிரக யோகம் உங்களுக்கு செயல்படப் போகி றது. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ் கீர்த்தி மேலோங்கும். இல்லம் கட்டி குடி யேறும் ஆசை நிறைவேறும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

ஜூன் 5ஆம் திகதி ரிஷப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரயத்திற்கேற்ற தனலாபம் வந்து கொண்டே யிருக்கும். அந்நியதேச பயணம் எண்ணிய படியே கைகூடும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குரு ஜூன் 11ஆம் திகதி முதல் வக்ர இயக்கத்தில் இயங்குகிறார். இதனால் அதிக விரயம் ஏற் படும். எதையும் கலந்து ஆலோசித்து செய் தால் ஏமாற்றத்தை தவிர்க்க இயலும். முரு கப் பெருமானை விசாக நாளில் தரிசிப்பதன் மூலம் முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**கலாமணி சிவல்புரி சிங்காரம்**

(தொடரும்)

---

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

BOC இலங்கை வங்கி

**க.பொ.த. உயர்தரம் (2008) "3A", "2AB" சித்தி பெற்றதீவக வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா**

**இடம் :** வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்
**காலம் :** 22.05.2009 வெள்ளிக்கிழமை
**நேரம் :** பிற்பகல் 1.00 மணி
**தலைவர் :** திரு இ.ஜயேந்திரா
*(செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)*
**வரவேற்பு நடனம்:** *யா/ வேலணை மத்திய கல்லூரி மாணவர்கள்*
**வரவேற்புரை :** *திரு.இ.சிவகுமார் (முகாமையாளர் இலங்கை வங்கி காரைநகர்)*
**பிரதம விருந்தினர் :** திரு.GV.இராதாகிருஷ்ணன்
*(வலயக் கல்விப் பணிப்பாளர் -தீவகம்)*
**கௌரவ விருந்தினர்கள்:** திரு மு.நந்தகோபாலன்
*(பிரதேச செயலர்-வேலணை,*
திரு.க. ஸ்ரீமோகனன்
*(உதவி அரசாங்க அதிபர்- , ஊர்காவற்றுறை)*
திரு.RT.ஜெயசீலன்
*(உதவி அரசாங்க அதிபர்- , காரைநகர்)*
திரு.ந.திருலிங்கநாதன்
*(உதவி அரசாங்க அதிபர்- , நெடுந்தீவு)*
**சிறப்பு விருந்தினர்:** திரு.K.மகேந்திரலிங்கம்
*(செயலாளர், பிரதேச சபை வேலணை)*
திரு A. கணேசானந்தராசா
*( செயலாளர், பிரதேச சபை, ஊர்காவற்றுறை)*
திரு.க.திருமாலழகன் *(ஆலோசகர் வலம்புரி)*
திரு.VS.சிவநாதன்
*(மாவட்ட முகாமையாளர்-இலங்கை வங்கி, வடபிராந்தியம்.)*
**கருத்துரை :** திருமதி .ந.பரமசிவம்
*(அதிபர்-யா/யாழ்ற்றன் கல்லூரி -காரைநகர்)*
**ஏற்புரை :** செல்வி ஜசிந்தா தர்மலிங்கம்
*(யா/வேலணை மத்திய கல்லூரி)*
**நன்றியுரை :** திரு கு.சிவஞானசுந்தரம்
*(முகாமையாளர் -இலங்கை வங்கி-ஊர்காவற்றுறை*
**நிகழ்ச்சித் தொகுப்பு :** திரு த.புவனேந்திரன்
*(முகாமையாளர் -இலங்கை வங்கி, அச்சுவேலி)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

***இலங்கை வங்கி***
***ஊர்காவற்றுறை காரைநகர்.***

---

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -01.05.2009

**அம்பன் அ.மி.த.க. பாடசாலை**






செய்ய முடிந்தவன் செய்கிறான். செய்ய முடியாத வன் போதிக்கிறான்.

– ஜார்ஜ் பெர்னாட்ஷா

வலம்புரி

## இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் முகாம் வாழ்க்கைக்கு முடிபு வேண்டும்

போர்க்களத்தில் சிக்குண்டு சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்த மக்கள் இப்போது முகாம்களில் தங்கியுள்ளனர்.

இலட்சக்கணக்கான தமிழ் மக்களை முகாம்களில் அடைத்து வைப்பதென்பது மிகப் பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

இருந்தும் அது பற்றி சர்வதேச சமூகம் மௌனம் காக்கிறது.

இது தவிர படுகாயமடைந்தவர்கள், குடும்பங்களை பிரிந்தவர்கள் என பெரியதோர் சோகம் மறைந்து கிடக்கிறது.

இவற்றை எல்லாம் நிவர்த்திப்பது என்பது முடியாத காரியம்.

இலங்கையின் வரலாற்றில் இந்த சோகம் நீங்கா இடத்தை பிடித்துக்கொள்ளும். நீண்ட கால அசைவில் இந்த வரலாற்றைப் படிக்கும் இளம் சந்ததி எடுக்கப்போகும் முடிவு என்ன?

அதனால் இந்த நாட்டுக்கு ஏற்படப் போகும் விளைவு யாது என்ற கேள்விகள் இப்போது பெறுமதியற்றவையாக இருப்பினும் என்றோ ஒருகால் அது பற்றி சிந்திக்கும் கட்டாயம் காலத்தால் உணர்த்தப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவைபற்றியெல்லாம் சிந்திக்கும் மானிடம் இன்றில்லை என்பது தெரிந்த விடயம் என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் வன்னிப் போர்க்களத்திலிருந்து மீண்ட மக்கள் முகாம்களில் அடைபட்டுக் கிடப்பதென்பது ஜீரணிக்க முடியாத விடயம்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கு சமவுரிமை கொடுப்போம் என்றெல்லாம் பேசலாம். அந்தப் பேச்சில் உண்மை இருக்கவேண்டும்.

இலட்சக்கணக்கான மக்களை முகாம்களில் அடைத்து வைத்துக் கொண்டு 'சமவுரிமை' எனப் பேசுவதெல்லாம் சாத்தியமற்றவை.

இலங்கை அரசு தமிழ் மக்களை இந்த நாட்டின் பிரஜைகள் எனக் கருதுமாயின் முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் மக்களின் நலன் தொடர்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

முகாம் வாழ்விலிருந்து அந்த மக்களை விடுவித்து அவர்கள் விரும்புகின்ற இடங்களில் அவர்களுக்கான வாழ்விடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

பிரிந்த குடும்பங்களை இணைப்பதற்கான வழிவகைகளை இனம் காண்பதும் அவசியம். இதனை விடுத்து இலட்சக்கணக்கான மக்களை முகாம்களில் அடைத்து வைப்பதென்பது இந்த நாட்டின் எதிர்கால அமைதிக்கு குந்தகமாகவே அமையும்.

# தமிழ் மக்கள் மீதான அரசின் அக்கறை வெளிக்காட்டப்படும்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா

(கொழும்பு)

தமிழ் மக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் உண்மையான அக்கறை எதிர்வரும் காலங்களில் வெளிக்காட்டப்படும். இதுவரை காலமும் சர்வதேச சமூகம் பொதுமக்களுக்காக குரல் கொடுத்தது உண்மை என்றால் வடக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

வடக்கு நடவடிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் தற்போதைய நிலைமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் ,

கடந்த 30 வருடங்களாக நாட்டை வாட்டிய பயங்கரவாதத்தை தோற்கடிக்கவும் சிவிலியன்களை மீட்கவுமே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. அதில் நாங்கள் தற்போது வெற்றி கண்டுள்ளோம்.

இந்நிலையில் இதன் பின்னர் நாங்கள் வடக்குப் பகுதியில் மேற்கொள்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தமிழ் மக்களின் சுய அபிலாசைகளை பூர்த்தி செய்ய அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகள் ஊடாகவே அந்த மக்கள் மீதான எமது உண்மையான அக்கறை வெளிப்படுத்தப்படும். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளை நிர்மாணித்தல் , வீதிகளை அமைத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவோம். அங்கு ஜனநாயகம் நிலை நாட்டப்படுவதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். இதேவேளை பொது மக்கள் குறித்து சர்வதேச சமூகம் பாரிய அளவில் குரல் கொடுத்து வந்தது. சிலவேளைகளில் இலங்கை அரசாங்கமும் சர்வதேசமும் முரண்படும் நிலைமைகளும் காணப்பட்டன. சர்வதேச சமூகம் பல சந்தர்ப்பங்களில் பொய்யான தகவல் களை ஆதாரமாகக்கொண்டு கருத்துக்களை வெளியிட்டு வந்தன.

ஆனால் அவை எல்லாவற்றிற்கும் தற்போது பதிலளித்துள்ளோம். எனவே பொதுமக்கள் தொடர்பில் சர்வதேசம் குரல்கொடுத்தது உண்மை என்றால் தற்போது அப்பகுதியில் இடம்பெறும் மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் இந்த கோரிக்கையை சர்வதேச சமூகத்திடம் நாங்கள் விடுக்கின்றோம் என்றார். (ஓ-4)

# சகல இன மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அரசியல் தீர்வை முன்வைக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கே

## மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பிரபாகரன்கள் உருவாகாமல் இருப்பதற்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்கின்ற வகையிலான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் எதிர்காலம் தொடர்பிலான மிகவும் தீர்க்கமான இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த 26 வருடங்களில் உயிர்த் தியாகம் செய்த முப்படை மற்றும் பொலிஸார் ஆகியோரை நாம் நினைவு கூர வேண்டும்.



இதேவேளை, பாது காப்பு வலயத்திலிருந்து மீட்கப்பட்டுள்ள ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பொது மக்கள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி பெற்றுள்ள வெற்றியானது உண்மையான மற்றும் நிரந்தரமான வெற்றி யாவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அவருக்கு இருக்கின்றது.

ஒரு போதும் இல்லாதவாறு தமிழ் மக்கள் , சிங்கள மக்களிலிருந்து தூரவிலகியுள்ள சந்தர்ப்பத்தில் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். எதிர்காலத்தில் மேலும் பிரபாகரன்கள் உருவாகாமல் இருப்பதற்கு, அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்கின்ற மற் றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை இனவாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அடிபணியாமல் முன்வைக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. (ஓ-4)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு உயர்தர மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம் கிட்டவில்லை

(கொழும்பு)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு க.பொ.த. உயர்தர வகுப்புக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான விபரங்கள் கிட்டவில்லை எனவும் இதனால் க.பொ.த. உயர்தர வகுப்பில் புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு உரிய முறையில் கற்பித்தல் செயற்பாடுகளை தொடர முடியாதுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த வருடம் க.பொ.த. உயர்தர வகுப்புக்கு அனுமதி பெறும் மாணவர்கள் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் போது புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் தயார் செய்யப்பட்ட வினாப்பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைக்கு தோற்றவேண்டும்.

அதேவேளை க.பொ.த. உயர்தர வகுப்பு கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட சகல பாடங்களுக்கும் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அதன் பிரகாரம் பாடப்புத்தகங்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு புதிய பாடத்திட்டம் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்க வில்லை என்றும் அதனால் பாடத்திட்டம் தொடர்பான உள்ள டக்கங்களை கற்பிக்கின்ற ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்து கொள்ளமுடியவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஆசிரியர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் இணையத்தளம் மூலம் அவற்றைப்பெற்று மாணவர்களுக்கு உதவி வருவதாகவும் எனவே குறித்த புதிய பாடத்திட்டம் தொடர்பாக முழுமையான விபரங்களைசம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் பாடத்தைக்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரப்படுகின்றது. (ஓ-4)

## க.பொ.த. (உ/த) விஞ்ஞான பாட பயிற்சிப் பரீட்சை நேரசூசி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று புதன் கிழமை நடைபெறவிருந்த உயிரியல் / இணைந்த கணிதம் பாடங்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 25ஆம் திகதி திங்கள் நடைபெறும் என்பதையும் ஏனைய பாடங்கள் நேர சூசிப்படி 21ஆம் 22ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் தொண்டமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### தன்னடக்கம்



நமது மன அமைதி மிகுந்து நமது மனத்தின் சஞ்சலம் குறையும் அளவிற்கு ஏற்ப நமது அன்பு வளரும். நமது செயலும் முன்னைவிடச் சிறக்கும்.

எஜமானைப் போன்று செயல் புரிய வேண்டும். அடிமையைப் போலல்ல. இடையறாது செயல் புரிக. ஆனால் அடிமை வேலையைச் செய்யாதே.

நீ பற்றற்றிரு ; மற்றவை வேலை செய்யட்டும் ; மூளையின் பகுதிகள் வேலை செய்யட்டும் ; இடையறாது வேலை செய். ஓர் அலை கூட மனத்தை வெல்ல இடம் கொடுக்காதே இவ்வுலகிற்கு நீ அன்னியன் போலவும் வழிப்போக்கன் போலவும் வேலை செய்; இடையறாது வேலை செய் ; ஆனால் உன்னை தளைகளுக்கு உள்ளாக்காதே ; அது அஞ்சத்தக்கது.

# வடகிழக்கில் குடியேறிய மலையக மக்களை மீளக்குடியேற்றுவதற்கு அரசை வலியுறுத்துவேன்

## மல்வத்தை மகாநாயக்க தேரர் உறுதி

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரங்கள் காரணமாக இடம்பெயர்ந்து வட கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியுள்ள மக்களை மீளவும் தாம் முன்னர் வாழ்ந்த மலையகப் பகுதிகளில் குடியமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கும் படி அரசின் அமைச்சர்களையும் ஜனாதிபதியையும் தாம் வலியுறுத்தப்போவதாக மல்வத்தை மகா நாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் உறுதியளித்துள்ளார்.

கடத்த வியாழன் மாலை தமது குடும்பத்துடன் மகாநாயக்க தேரரிடம் ஆசி பெறச் சென்ற ஸ்ரீ.சு.க.வின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் எம்.சசீகரன் விடுத்த கோரிக்கையொன்றையடுத்தே அவர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

1983ஆம் ஆண்டு கலவரங்களினைத் தொடர்ந்து அடைக்கலம் தேடி வட பகுதிக்குச் சென்று குடியேறிய கண்டி மாத்தளை நுவரெலியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் அங்கு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு அதிலிருந்து விடுபட முடியாத நிலையிலுள்ளனர். தற்போது அங்கு பயங்கரவாதத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் பாரிய யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தற்போது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய இன ஐக்கியத்துக்கான வேலைத்திட்டத்தால் ஈர்க்கப்பட்டு மீண்டும் தாம் முன்னர் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மலையகப் பகுதிகளில் குடியேற விரும்புகின்றனர். அதற்கான சூழலை ஏற்படுத்தி தர வேண்டியது அவசியமானதாகும் என்று சசிகரன் எடுத்துரைத்தார். பன்னெடுங்காலமாக சித்திரைப் புத்தாண்டையும் வைகாசி விசாகத்தையும் சிங்கள தமிழ் இரு இனங்களுமே சௌஜன்யமாகக் கொண்டாடி வருகின்ற நிலையில் அண்மையில் இறக்கு வானையில் கோயில் திருவிழா நிகழ்வுகள் வட பகுதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு மீளவும் இப்பகுதிக்கு வந்து குடியேறி சுதந்திரமாக வாழ முடியுமா என்ற சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற சந்தேக உணர்வுகளை போக்குவதற்கு பெரும்பான்மை இன அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் மாத்திரமன்றி சாதாரண மக்களும் முன்வர வேண்டியதன் அவசியம் பற்றியும் சசி கரன் எடுத்துரைத்தார். இவற்றுக்கு செவிமடுத்த மகாநாயக்க தேரர் மலையகப் பகுதிகளிலிருந்து வட பகுதிக்கு அடைக்கலம் தேடிச் சென்று இன்று முகாம்களில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை மீளவும் அவர்கள் முன்னர் வாழ்ந்த பகுதிகளில் குடி அமர்த்து வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார். (ஓ-4)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ புதிய இணையத்தளம் ஆரம்பம்

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு உலகின் எந்த பாகத்திலிருந்தும் உதவுவதற்காக இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

Futuresrilanka.com எனும் இணையத்தின் மூலம் இடம் பெயர்ந்த மக்களுக்கு உலகத்தின் எந்த நாட்டிலிருந்தும் உதவக் கூடிய வகையில் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் இடம் பெயர்ந்த மக்களின் நன்மை கருதி இவ் இணையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் இணையத்தில் உதவி செய்பவர்களின் விபரங்கள் பதியப்பட்டிருக்கும் உலகிலுள்ள மக்கள் இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் துயர் துடைப்புக்காக உதவ முன்வர வேண்டும். இம் மக்களுக்கு உதவ விரும்புபவர்கள் இந்த இணையத்தினூடாக தொடர்பு கொண்டு உதவ முடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

## இந்தியா -அமெரிக்கா ஒப்பந்தம் போல பாகிஸ்தான்- பிரான்ஸ் அணுசக்தி ஒப்பந்தம்

(பாரிஸ்)

இந்தியாவும் அமெரிக்காவும் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது போல பாகிஸ்தானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ள பிரான்ஸ் முன்வந்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் மின்சார தேவை அதிகரித்து வருகிறது. இதனால் அணுமின்சாரம் தயாரிப்பதற்கு பிரான்ஸ் உதவ முன்வந்துள்ளது. இது தொடர்பாக பிரஞ்சு அதிபர் சர்கோசியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாகிஸ்தான் அதிபர் சர்தாரி பிரான்ஸ் சென்றார்.

அவர் சர்கோசியை சந்தித்த பிறகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அணுமின் உற்பத்திக்கான தொழில் நுட்பத்தை பாகிஸ்தானுக்கு வழங்க பிரான்ஸ் முன் வந்துள்ளது என்று தெரிவித்தார்.

இது தொடர்பான பேச்சவார்த்தை ஜுலை மாதம் நடக்கிறது. செப்டெம்பர் மாதம் சர்கோசி பாகிஸ்தான் செல்கிறார்.

அப்போது ஒப்பந்தம் கையெழுத்தாகிறது என்றும் தெரிவித்தார். (ஓ-6)

## பிரபல உருகுவே எழுத்தாளர் மரியோ பெனடெத்தி மரணம்



உலகப் புகழ் பெற்ற உருகுவே எழுத்தாளர் மரியோ பெனடெத்தி தனது 88 ஆவது வயதில் மரணமானார்.

நீண்ட காலமாக சிறுகுடல் சம்பந்தமான பிரச்சினையால் அவதிப்பட்ட மரியோ பெனடெத்தி இம் மாத ஆரம்பத்தில் உடல் நலம் மோசமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் விற்பனையில் சாதனை படைத்த த றூஸ் மற்றும் ஜுவான் ஏஞ்சல்ஸ் பேர்த்டே உட்பட பல நாவல்களையும் பெருந்தொகை யான சிறுகதைகள் கவிதைகள் என்பனவற்றையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- கியூப முன்னாள் தலைவர் பிடெல் காஸ்ட்ரோவின் ஆதரவாளரான மரியோ பெனடெத்தி தனது தாய் நாடான உருகுவேயிலிருந்து வெளியேறி சில காலம் கியூபாவில் வாழ்ந்தார். அக் காலகட்டத்தில் அவர் அரசியல் உணர்வுமிக்க எழுத்தாக்கங்களைப் படைத்தார். (ஓ-4)


## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



பிறப்பு 10.06.1946 மறைவு 10.04.2009

அமரர்

### நடராசா இரத்தினம்

நாட்கள் நாற்பத்தொன்று ஆனாலும்
ஆறுமோ அப்பா எம் துயரம் !
நெஞ்சிருக்கும் வரை நிறைந்திருக்கும்
உங்கள் நினைவு!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம் !

10.04.2009 ஆம் திகதி இறைபதம் அடைந்த எங்கள் குடும்பவிளக்கின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி கூறி இன்று (20.05.2009) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

40, கிருஷ்ணபிள்ளைவிதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## அமெரிக்கா அலபாமாவில் 6 பிள்ளைகளின் தாயைக் கொன்ற நபருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

அமெரிக்கா அலபாமாவில் 6 பிள்ளைகளின் தாயைக் கொன்ற நபரொருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற ஆடைத் தொழிற்சாலை பணியாளரான எல்லா போய் றிலே (68 வயது) என்ற பெண்மணியை அவரது வளர்ந்த பிள்ளைகள் முன்னிலையில் படுகொலை செய்த குற்றச்சாட்டில் வில்லி மக்நயர் (44 வயது) என்ற இந்த நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

படுகொலையை உறுதிப்படுத்தும் வகையில் மரணமடைந்தவரின் சார்பில் 6 சாட்சிகளும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் 6 சாட்சிகளும் ஆஜராகும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவருக்கு மரணதண்டனையை நிறைவேற்றுவதை அனுமதிக்கும் சட்டத்தில் அலபமா ஆளுநர் அண்மையில் கைச்சாத் திட்டிருந்தார்.

இதற்கு முன் இரு தரப்பிலும் இரு சாட்சிகள் வீதம் ஆஜரானால் போதுமானதாக இருந் தது.

எல்லா போய் றிலேயின் பிள்ளைகள் அறுவரும் தமது தாயின் படுகொலைக்கு நியா யம் கிடைக்க கடந்த 19 வருடங்களாக போராடி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## லிதுவேனியாவின் முதலாவது பெண் ஜனாதிபதியாக டாலியா தெரிவு



லிதுவேனியாவில் முதலாவது பெண் ஜனாதிபதியாக டாலியா கிறைபோஸ்கெய்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

96 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் டாலியா 68 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

அவரது போட்டியாளரான சமூக ஜன நாயக கட்சியைச் சேர்ந்த அல்கிர்டாஸ் புத்கெவிசியஸ் 12 சதவீதவாக்குகளை மட்டுமே பெற்று இரண்டாம் இடத்திலுள்ளார்.

இத்தேர்தலில் 7 வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய ஒன்றிய வரவு செலவுத்திட்ட ஆணையாளரான டாலியா தனது தேர்தல் வெற்றியையடுத்து ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தன்னை இந்த பொறுப்புமிக்க பதவிக்கு தெரிவு செய்த மக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாக கூறினார்.

லிதுவேனியா அரசியலமைப்பின் பிரகாரம் பொருளாதார கொள்கைகளில் ஜனாதிபதி பதவியை வகிக்கும் ஒருவர் வரையறுக் கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளார். எனினும் அவர் அந் நாட்டு வரவு செலவுத்திட்டம் மீது மறுப்பாணை அதிகாரத்தை பிரயோகிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

டாலியா எதிர்வரும் ஜுலை மாதம் 12ஆம் திகதி தனது பதவியை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும போக்கு வரவு செலவுத் திட்ட ஆணையாளரான டாலியா கறுப்புப்பட்டி பெற்ற கராத்தே வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## உயரத்துக்கு ஏற்ப அதிகரிக்கும் வருமானம்

### புதிய அவுஸ்திரேலிய ஆய்வு

(சிட்னி)



உயரமானவர்கள் தம்மையொத்த தகைமைகளைக் கொண்ட குள்ளமானவர்களை விட அதிக வருமானத்தை ஈட்டுவதாக அவுஸ்திரேலியாவின் புதிய ஆய்வொன்றுதெரிவிக்கிறது.

குறிப்பாக ஆண்கள் தமது ஒவ்வொரு 10 சென்ரி மீற்றர் (4 அங்குலம்) மேலதிக உயரத்துக்கும் 3 சதவீதம் அதிகமான மணித்தியால சம்பளத்தைப் பெறுவதாக இந்த ஆய்வில் பங்கேற்ற சிட்னி பல்கலைக் கழகம் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் என் பவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் பெண்களைப் பொறுத்த வரை அவர்களது ஒவ்வொரு 10 சென்ரிமீற்றர் உயரத்துக்கும் 2 சதவீத அதிக மணித்தியாலய சம்பளத்தைப் பெறுவதாக இந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆண்களின் சராசரி உயரமான 5 அடி 10 அங்குலத்திற்கு மேலதிகமாக காணப்படும் ஒவ்வொரு 2 அங்குல உயரத்துக்கும் அவர்களின் வருமானம் உயர்வதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

உயரத்துடன் வயது இனம் குடும்பப் பின்னணி அனுபவம் கல்வி என்பனவும் ஒரு வரின் ஊதியத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்களிப்பு வகிப்பதாக அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசியர் அன்ட்றூ லெய்க் தெரிவித்தார். (ஓ-4)

# டில்லி அணியை வீழ்த்திய பெங்களூர் அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது

(ஜோகனஸ்பேர்க்)

ஜக்கலிஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிவாய்ப்பைத்தக்கவைத்துக்கொண்டது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் எட்டு அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 52 ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டினேஷ் கார்த்திக் 29 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 30 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் 29 ஓட்டங்களையும், காம்பீர் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் நாயர் 20, மகரூப் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவீன் குமார் 3 விக்கெட்டுக்களையும் அனில்கும்ளே 2 விக்கெட்டுக்களையும் கலிஸ், வான்டேர் மேர்வ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 135 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 135 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜக்கலீஸ் ஆட்டமிழக்காமல் 56 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் ரெய்லர் 12 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நாகர் இரு விக்கெட்டையும் நெகரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில்பெங்களூர்றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் ஜக்கலிஸ் ஆட்டநாயகனாகத் தெரி வானார்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல்சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7ஆவது வெற்றியை பதிவு செய்ததுடன் அரையிறுதி வாய்ப்பையும் தக்கவைத்தது.

இதேவேளை டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 4ஆவது தோல்வியை சந்தித்தது.

# ஷரபோவா வெற்றி



(லண்டன்)

முன்னாள் முதல் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா காயத்திற்கு பின்னர் வெற்றியுடன் டென்னிஸ் களத்திற்கு திரும்பினார்.

தோள்பட்டை காயம்காரணமாக 10 மாத காலமாக டென்னிஸ் அரங்கில் விளையாடாமல் இருந்த ஷரபோவா நேற்று முன்தினம் போலாந்தில் நடைபெற்றுவரும் வார்சோ ஓபன் போட்டியில் முதல் முறையாக களமிறங்கினார்.

இதில் அவர் இத்தாலியின் 68 ஆம் நிலை வீராங்கனை ததியான கார்பின்னுடன் மோதினார்.

பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத் தில் ஷரபோவா 6:1, 6:7, 6:3 செற் கணக்கில் போராடி வெற்றியீட்டினார்.

இதுவரை மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஷரபோவா தற்போது உலக தரவரிசையில்

126-வது இடத்திற்கு பின் தள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# ஐ.சி.சியின் முடிவுக்கு பாக். நீதிமன்றம் தடை

(கராச்சி)

உலகக் கோப்பை தலைமையகத்தை லாகூரிலிருந்து மாற்றும் சர்வதேச கிரிக்கெட் சபையின் முடிபுக்கு பாகிஸ்தான் நீதி மன்றம் தடை விதித்துள்ளது.

2011ஆம் ஆண்டு உலகக் கோப்பையை இந்திய-பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து நடத்த இருந்தன.

எனினும் பாகிஸ்தானில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான தாக்குதலை தொடர்ந்து அந்நாட்டில் நடைபெற இருந்த உலகக் கோப்பை ஆட்டங்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ரத்து செய்தது.

மேலும் உலகக் கோப்பை தலைமையகத்தையும் லாகூரிலிருந்து மும்பைக்கு மாற்றியது.

இதனை எதிர்த்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தொடர்ந்த வழக்கில் அந்நாட்டு நீதி மன்றம் ஜூன் 2ஆம் திகதி வரை தலைமையகத்தை மாற்ற தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெறும் என லாகூர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதனிடையே உலகக் கோப்பையில் பாகிஸ்தான் நிலை குறித்து விவாதிக்க உலகக் கோப்பை நிர்வாகத்தின் கூட்டம் எதிர் வரும் 27ஆம் திகதி நடைபெறுகிறது.

# இடம்பெயர்ந்த மக்கள்...

மக்களின் நிலைமைகள் குறித்துத்தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐக்கிய நாடுகள் மனித நேய விவகாரங்களுக்கான செயலாளர் ஜோன் ஹோம்ஸ் கூறினார்.

இலங்கையில் நிலைமை மாறி வருகிறது. இதனால் தகவல்கள் எதுவும் தெளிவாகவில்லை என நியூயோர்க்கில நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஹோம்ஸ் தெரிவித்தார்.

மோதல்கள் முடிபுக்கு கொண்டு வரப்பட்டால் மோதல்கள் நடைபெற்ற பகுதியிலிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட வேண்டும்.

அவர்களுக்கான உத விகள் வழங்கப்பட வேண்டும். இதற்கு நாமும் உதவி செய்வோம்.

தற்போது காணப்படும் நிலையை தம்மால் உடனடியாக உறுதிப்படுத்த முடியாதிருப்பதாகக் குறிப்பிட்ட ஜோன் ஹோம்ஸ் மோதல் பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் அந்த பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என நம்புகிறோம் என்றார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நாளை மறுதினம் இலங்கை வரவுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பையேற்றே அவர் இலங்கை வரவுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருந்த பான்கீ மூன் மோதல்கள நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, இலங்கைக்கு வந்து இடம்பெயர்ந்த மக்களின் நிலைமையைப் பார்வையிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் எதிர் வரும் 22ஆம் திகதி பான்கீ மூன் இலங்கை வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ந-5)

# புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போட்டிகள் | வெற்ற | தோல்வ | சமநிலை | முடிபு இல்லை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| டில்லி டேர்டேவில்ஸ் | 13 | 9 | 4 | 0 | 0 | 18 | +0.251 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 7 | 5 | 0 | 1 | 15 | +0.932 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | +0.265 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | -0.253 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | -0.423 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 6 | 6 | 0 | 1 | 13 | -0.360 |
| மும்பை இந்தியன்ஸ் | 13 | 5 | 7 | 0 | 1 | 11 | +0.401 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 13 | 2 | 10 | 0 | 1 | 5 | -0.891 |

# பிரபாகரன் உயிருடன் இருக்கிறார்...

தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் முழுமையாகவே இழந்துவிட்டது எனவும் தமிழ்நெட் இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டியில் செ. பத்மநாதன் தெரிவித்திருக்கின் றார். அவரின் பேட்டியின் முக்கிய விபரங்கள் வருமாறு,

*இந்தப்போரில் வெற்றி பெற்றிருப்பதாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றது. இந்த போரில் உண்மையிலேயே அரசு வெற்றி பெற்றுள்ளதா?*

அரசாங்கம் நிரூபிக்க முடியாத ஒரு உரிமை கோரலை வெளியிட்டிருக்கின்றது. எமது தேசியத் தலைவர் உயிருடனும் நலமாகவும் உள்ளார் என்பதை மட்டும் என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

ஆனால் எமது அமைப்பின் பல மூத்த உறுப்பினர்களும் தலைவர்களும் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது துரோகத்தனமாக கொல்லப்பட்டுள்ளனர் என்பது உண்மை. இது மிகவும் துரதிர்ஷ்டமானது. ஆனால் எமது மக்களுடைய விருப்பங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் எமது போராட்டம் தொடரும்.

இராணுவம் தமக்கு ஒரு இராணுவ வெற்றி கிடைத்திருப்பதாகப் பிரகடனம் செய்யலாம். ஆனால் அது ஒரு வஞ்சகத்தனமான வெற்றி என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லை. தமிழ் மக்களுடைய நம்பிக்கையை இவர்கள் முற்றாக இழந்து விட்டனர்.

*தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கும் போது விடுதலைப் புலிகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?*

தமிழ் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறைகளில் அல்லாமல் ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளையே முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் எமது முன்னைய அறிக்கைகள் பலவற்றிலும் தெளிவாக தெரிவித்திருந்தோம்.

எமது மக்களுடைய உயிர்களைப் பாதுகாப்பதற்காகவே அந்த நிலைப்பாட்டை நாம் எடுத்தோம். தமிழ் மக்கள் மீது குண்டுகளை வீசியும் எறிகணைகளால் தாக்குதல் நடத்தியும் அவர்களைப் படுகொலை செய்வதற்கு அரசாங்கம் போரைப் பயன்படுத்துவதை தொடர்ந்தும் அனுமதிக்க நாம் விரும்பவில்லை.

இந்த விவகாரத்தில் தலையிட்டு தாக்குதலை தடுத்து நிறுத்துமாறு அனைத்துலக சமூகத்தை நாம் கேட்டுக்கொண்ட போதிலும் இதனைக் கருத்திற் கொள்ளாமல் தாக்குதல் நடவடிக்கையை தொடர்வதிலேயே அரசு குறியாக இருந்தது.

எமக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய முன்வந்த எமது போராளிகளும் தலைவர்களும் அனைத்துலக நடவடிக்கைகள் அனைத்தையும் மீறும் வகையில் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இந்த விடயத்தில் ஒரு பலமான நிலைப்பாட்டை எடுத்து அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்கும் அனைத்துலக சமூகம் மறுத்துவிட்டது.

இந்த நிகழ்வுகளையிட்டு நாம் மிகவும் வருந்துகிறோம். ஆனால் இலங்கையில் உள்ள தமிழர்களின் எதிர்காலமும் தமிழ்த் தேசியப்பிரச்சினையும் தீர்வு எதுவும் இன்றி தொடர்ந்திருக்கப் போகின்றது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பதற்கான தமது பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தமது ஆணையை மக்கள் வழங்கியிருக்கின்றனர். இவ்வாறு மக்கள் எமக்கு அளித்துள்ள ஆணையின் அடிப்படையில் பொருத்தமான மாற்று திட்டங்களையிட்டுப் பரிசீலனை செய்வதற்கு எமது அமைப்பு தயாராக இருக்கின்றது.

*நீங்கள் அரசியல் தீர்வு ஒன்று தொடர்பாகப் பேசுகின்றீர்கள். ஆனால் கொழும்பு வெளிப்படுத்தும் உணர்வுகளும் தமிழ் மக்களுடைய விருப்பங்களைப் புரிந்து கொள்ளாதவாறு நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்படும் மனநிலையும் இதற்கு ஏற்றதாக உள்ளதா?*

சிங்கள மக்களிடம் இருந்து வெளிப்படும் உணர்வுகளும் அவர்களின் போக்கும் துரதிர்ஷ்டமானதாகவே இருக்கின்றது. இந்த நாட்டில் தமிழர்கள் சம உரிமை கொண்ட குடிமக்களாக கருதப்பட்டால் அவர்கள் கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும். ஆனால் அரசாங்கமும் இராணுவத்தினரும் பேரினவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலேயே தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இது இனங்களுக்கு இடையேயான பிளவுகளை மேலும் அதிகப்படுத்துவதற்கு வழிவகுப்பதாகவும் பகை உணர்வுக்கு முடிவைக் கொண்டு வருவதற்கு தடையாகவும் இருக்கும்.

*விடுதலைப்புலிகளுக்கு பிற்பட்ட காலம் எனப் பேசப்படுகின்றது. இந்த நிலையில் விடுதலைப்புலிகளால் மக்களை எவ்வாறு அணிதிரட்டி அதற்கான தலைமையை வழங்க முடியும்?*

எமது தேசியப்பிரச்சினை ஆசியாவின் நீண்ட காலப் பிரச்சினைகளில் ஒன்றாக பார்க்கப்படுகின்றது. தற்போது உருவாகியிருக்கும் நிலைமைகளுக்கு இசைவாக எமது தந்திரோபாயங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது எமது தலைமைக்கு தெரியும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு பின்னால் அணி திரண்டு தமது தீவிரமான ஆதரவை உலகம் முழுவதிலும் வெளிப்படுத்தியிருந்தமையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வன்னியில் இடம்பெற்றுள்ள கொடூரம் தமிழர்களிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தியிருக்கின்றது.

இதனைத் தனித்துநின்று சாதிக்க முடியாது என்பது எமக்குத் தெரியும். தமிழர்களின் நலன்களையும் அவர்களுடைய எதிர்காலத்தையும் உறுதிப்படுத்துவதற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தமிழர்கள் அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் மேற்கொள்ளக் கூடிய பங்களிப்பை நாம் வரவேற்கின்றோம். இதனை அடைவதற்காக இந்தியாவில் உள்ள தமிழ்க்கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளுடனும் இணைந்து செயற்படுவதற்கு நாம் விரும்புகிறோம்.

தமிழர்களின் இந்த தேசியப் பிரச்சினையின் அடிப்படையில் பல தமிழ்க் கட்சிகள் முன்னர் ஆயுதம் ஏந்திய போராட்டத்தை மேற்கொண்டிருந்தன. அவர்கள் அந்தக் கோட்பாடுகளுக்கு இப்போதும் கௌரவம் கொடுப்பார்கள் என நாம் நம்புகிறோம். இந்த நிலையில் அதனை அடைவதற்காக இணைந்து செயற்படுவதற்கு அவர்கள் முன்வருவார்கள் என நாம் நம்புகிறோம் எனப் பத்மநாதன் தெரிவித்தார்.

(ந-5)

## அரசியல் தீர்வுக்கான முயற்...

தோற்கடித்து விட்டதாக அரசாங்கம் அறிவித்திருக்கும் நிலையிலேயே அமெரிக்காவின் இந்த வேண்டுகோள் வெளியிடப்பட்டிருக்கின்றது. அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் இயன் கெலி வாஷிங்ரனில் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனால் அனைத்துலக நாணய நிதியத்தினால் இலங்கைக்கு 1.9 பில்லியன் டொலர் கடன் உதவி வழங்கப்படுவதை அமெரிக்கா தொடர்ந்தும் எதிர்க்குமா எனக் கேட்கப்பட்ட போது அதற்குப் பதிலளிப்பதற்கு அவர் மறுத்து விட்டார்.

இலங்கை அரசாங்கமானது தனது கடந்த காலத்தில் இருந்து ஒரு புதிய பக்கத்துக்குப் பிரவேசித்து ஜனநாயக அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை இது ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றது எனவும் தெரிவித்த கெலி தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் ஏனையவர்களுடன் சம்பந்தப்பட்ட வகையில் நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான தருணம் இலங்கை அரசுக்கு வந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

வடபகுதியில் போர் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து வெளியேறி வந்திருக் கும் சுமார் 2 இலட்சத்து 80ஆயிரம் மக்களுக்கான அடிப்படை உதவிகளும் தேவைகளும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் வலியுறுத்தியிருக்கின்றார்.

இதேவேளையில் தமிழர்களின் சுயாட்சிக்கான விருப்பத்தை கொழும்பு புறக்கணித்து விடக் கூடாது என நோர்வேயின் அமைச்சரும் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராகப் பணிபுரிந்தவருமான எரிக் சொல் ஹெய்ம் இலங்கை அரசைக் கேட்டுள்ளார். (ந-5)

## இன்று பொது...

இன்றைய நாளை பொது விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்துவதாக ஜனாதிபதி நேற்றுக் காலை நாடாளுமன்றத் தில் ஆற்றிய விசேட உரையில் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்திலிருந்து முழு நாடும் மீட்கப்பட்டுள்ளதை குறிக்கும் முகமாகவே இந்த விடுமுறை வழங்கப்படுவதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (ந-5)

## பிரபாகரனின் சடலம்...

செய்தியை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அரசாங்கத் தொலைக்காட்சிகள் ஊடாக நாட்டு மக்களுக்கு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து பயங்கரவாதம் முடிவுக்கு வந்ததாகவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் முக்கிய பிரதிநிதிகள் சிலரும் வாகனமொன்றில் தப்பிச் செல்ல முற்பட்டபோது இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இந்தத் தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார உறுதிப்படுத்திருக்கவில்லை.

பிரபாகரனின் சடலம் இன்னமும் மீட்கப்படவில்லையென அவர் நேற்று முன்தினம் கூறியிருந்தார் எனினும் நேற்று அவரின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். (ந-5)

## முல்லைத்தீவுக்குச் சென்ற...

காட்டப்பட்டிருந்தாலும் அவரது உடல்தானா என சில சந்தேகங்கள் இருந்தது. நான் நேரடியாக முல்லைத்தீவு பிரதேசத்துக்குச் சென்று பார்வையிட்டேன். அவரது உடலத்தை உறுதியாக என்னால் அடையாளம் காட்டக் கூடியதாக இருந்தது. நான் அவருடன் 22 வருடங்கள் இருந்தி ருக்கின்றேன். அதனால் அவரது உடலை அடையாளம் காண்பது இலகுவான விடயமாக இருந்தது.

புதுமாத்தளன் பிரதேசத்தில் அவரது உடலம் காணப்பட்டது. நான் அப்பிரதேசத்தில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படை அதிகாரி பிரிகேடியர் சவீந்திர சில்வாவுடன் உரையாடிய போது பிரபாகரன் தமது சகாக்களுடன் தப்பிச் செல்ல முற்பட்ட போது படையினரின் துப்பாக்கிச் சூடு அவரது தலையில் தாக்கியதில் உயிரிழந்ததாக கூறினார்.

நானும் நேரடியாக அவரது உடலத்தைப் பார்த்தபோது தலையில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. பிரபாகரன் அம்புலன்ஸ் வண்டியில் சூசை உட்பட்டோருடன் சென்ற போது கொல்லப்பட்டதாக முன்னர் வெளியான தகவல்கள் தவறானவை.

அவருடன் இருந்த முக்கியமானவர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார்கள். பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்கள் நான்கு பேர் அவருடன் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே இறந்த பொட்டு அம்மான், சூசை போன்றவர்களின் உடலங்கள் உள்ள இடத்திற்கு நான் சென்று பார்க்கவில்லை. அவர்களது உடலங்களும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. அவற்றை தொலைக்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது. இவர்களது உடலங்கள் அங்கேயே புதைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத்தான் நான் நம்புகிறேன்.

பிரபாகரன் உயிருடன் இருப்பதாக அவர்களின் சர்வதேச விவகாரப் பேச்சாளர் பத்மநாதன் கூறுவது முற்றுமுழுதாக தவறான விடயம். நான் நேரடியாகச் சென்று பார்த்த உண்மையையே கூறுகிறேன். ஆனால் இவ்வாறான சர்ச்சை தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவரது உடலைக் காட்டிவிட்டு புதைப்பது தொடர்பாக அரசுடன் கலந்துரையாடுகிறேன் என்றார். (ந-5,14)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management
(MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 05/06/2009
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 06/06/2009
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-
Centre for Information Technology
-Executive Officer



பதவி வெற்றிடம்
பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்கள் தேவை
✪ கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு
பெண்கள் (பகல் கடமை)
ஆண்கள் (இரவுக் கடமை)
✪ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(ஆண்கள் பகல், இரவுக் கடமை)
யாழ்.நகர மையத்திலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.
வலம்புரி,
இல. 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
-நிர்வாக உத்தியோகத்தர்.


## தமிழ் மக்கள் சிறுபான்மையினர்...

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்திற்கு விமர்சையாக அழைத்துச் செல்லப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் அதன் பின்னர் நாடாளுமன்ற சபாநாயகர் ஆசனத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரை யாற்றினார்.

தமிழ்மொழியில் தனது உரையை, ஆரம்பித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதன் பின்னர் மிக நீண்டதொரு உரையை சிங்கள மொழியில் ஆற்றினார்.

இலங்கையில் எந்த இனத்தினரும் சிறுபான்மையினர் அல்ல என்று தனது உரையில் வலியுறுத்திக் கூறிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ; தமிழர்களோ, முஸ்லிம்களோ, பறங்கியரோ இந்த நாட்டின் சிறுபான்மையினர் அல்ல என்று குறிப்பிட்டார்.

தற்போது இந்த நாட்டில் இரண்டு இனங்களே உண்டு. ஒன்று இந்த நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள். மற்றையவர்கள் நாட்டின் மீது பற்றற்ற ஒருசிறு தொகையினர்.

இவர்கள் மிகச் சிறிய தொகையிலேயே உள்ளனர்.

தமிழ் மக்கள் என்றுமே ஆயுத விரும்பிகளாக இருந்ததில்லை. இந்திய-இலங்கை உடன்படிக்கைக் காலத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளித்த போது மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததன் மூலம் தாம் ஆயுத விரும்பிகளல்ல என்பதை தமிழர்கள் அப்போதே வெளிப்படுத்தியிருந்தார்கள்.

விரைவில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வு முன்வைக்கப்படும்.

இராணுவ வழிமுறையில் பிரச்சினைக் குத்தீர்வு காணமுடியாது. உலகில் எந்தவொரு நாட்டினரும் எதிர் கொள்ளாத சவாலை எதிர் கொண்டு வெற்றி பெற்ற இந்த நாட்டுக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்கண்டு கொள்ளும் வல்லமை உண்டு.

வடக்கு கிழக்கு முரண்பாட்டுக்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடனும் தீர்வு காணப்படும்.

இதற்கு அனைத்துலக உதவிகள் எமக்குத் தேவையில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரகடனம் செய்தார்.

### தமிழர்களுக்கு எதிரான வெற்றி அல்ல

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து தற்காலிக கூடாரங்களுக்குள் வாழ வேண்டிய நிலைக்கு விடுதலைப் புலிகளே காரணம்.

தற்பொழுது பெறப்பட்டிருக்கும் வெற்றி தமிழர்களுக்கு எதிரான வெற்றியல்ல. நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றி. தமிழர்களைப் பாதுகாக்க வேண்டியது எனது கடமை. அதனை நான் நிறைவேற்றுவேன்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றபோது இலங்கையின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியையும்,கடல் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கினையும் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

பயங்கரவாதிகள் பலம் பொருந்தியிருந்த நிலையிலேயே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். தற்பொழுது அவர்கள் முற்றாக அழிக்கப்பட்டதுடன் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உள்ளிட்ட நாட்டுத்தலைவர்களையும் பல்வேறு அரசியல் தலைவர்களையும் விடுதலைப் புலிகள் படுகொலை செய்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கைப் படத்தில் பெரும் பகுதியை தமது பகுதிகள் எனக் குறிப்பிட்டு வைத்திருந்த விடுதலைப் புலிகள் ஈழ இராச்சியம் அமைப்பதற்கே முயற்சித்தனர். பயங்கரவாதத்திற்கு எதிராகப் பல்வேறு நாடுகள் பல முயற்சிகள் எடுத்துள்ள போதும் இலங்கை அதில் வெற்றி கண்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார்.

### வடக்கின் வசந்தம்

பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட வடபகுதியில் விரைவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இடம்பெயர்ந்த மக்கள் மீளக் கட்டியெழுப்பப்பட்ட தமது பகுதிகளில் சென்று குடியமர்வதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

அண்மையில் மீட்கப்பட்ட மன்னார்ப் பகுதியில் தற்பொழுது புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதம் இல்லாமல் செய்யப்பட்டிருப்பதால் தனியார் துறையினர் அச்சமின்றி முதலீடுகளைச் செய்ய முடியும்.

குறிப்பாக வடபகுதியில் முதலீடு செய்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வர்த்தகத் துறையினரிடம் கோரிக்கை விடுக்கிறேன்.

இலங்கையில் இருந்து வெளியேறி வெளிநாடுகளில் வசிப்பவர்கள் நாடு திரும்ப வேண்டும். குறிப்பாக தமிழர்கள் நாடு திரும்பி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

வெளிநாட்டிலுள்ள இலங்கை வைத்தியர்கள்,பொறியியலாளர்கள்,கணக்காளர்கள் என பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இலங்கை திரும்ப வேண்டும். இந்தக் கோரிக்கையை நான் கடந்த சுதந்திர தின உரையிலும் முன்வைத்திருந்தேன்.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதில் கிடைத்திருக்கும் வெற்றியானது எனக்கு மாத்திரம் கிடைத்த தனி வெற்றியல்ல. தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து சமூகத்தினருக்கும் கிடைத்த வெற்றியே இதுவாகும்.

நானும் எனது சகோதரர்களும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகளுக்குச் சிலர் 'மகிந்த அன் கொம்பனி' என கேலி செய்தனர்.

தற்பொழுது கிடைத்திருக்கும் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம் என நான் கருதுகிறேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

1980களில் இருந்து பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடி உயிர் நீத்த இராணுவ வீரர்களின் ஆயிரக்கணக்கான பெற்றோருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, நாட்டுக்காக அர்ப்பணித்த அவர்களை பாராட்டுவதாகவும் கூறினார்.

இந்த வெற்றியைக் கொண்டாடும் நோக்கில் 20.05.2009 புதன்கிழமை தேசிய விடுமுறையாக அறிவிப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ந-5)


ஆசிரியர் S.S.SRI இன்
பொருளியல் பரீட்சை-3
21.05.2009 வியாழக்கிழமை காலை 9மணிக்கு
நடைபெறும்.
(C-2485)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.